பத்ரகாளீ தீப பூஜையும் தேவீபாராயண துதிதிரட்டும்



தொகுத்தவர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.,
சென்னை.

வெளியீடு
07-11-2019
சிவாசார்யர் டிரஸ்ட் (பதிவு) மற்றும்
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் டிரஸ்ட் (பதிவு)
207/101 தம்புசெட்டி தெரு, சென்னை-1.

ஸ்ரீ விக்னேச்வரர்

வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப,

அவிக்னம் குருமே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா.

உ

ஸ்ரீ குருவருள் துணை

பத்ரகாளீ தீப பூஜையும் தேவீபாராயண துதிதிரட்டும்

தொகுப்பாசிரியர்

ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, சைவாகமக்ஞ சூடாமணி, சைவாகம வித்வான்,
வ்யாகரண விசாரதா, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர்,
சிவாகம அருட்செல்வர், ஸம்கிருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி,
வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ: , ஆகம கல்பத்ரும:,
ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக ஸாம்ராட்,
வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம்,
சைவாகம பரீக்ஷாதிகாரீ, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தா உபாஸகர், அகோரசிவம் என்கிற

சிவஸ்ரீ. விஜய. சோமசேகரசிவாசார்யார் M.A.,

குருமுதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை–1.

வெளியீடு

சிவாசார்யார் அறக்கட்டளை (பதிவு) **மற்றும்**

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் (பதிவு)

207/101 தம்புசெட்டி தெரு, சென்னை–1.

சார்பில் **07-11-2019** அன்று

சென்னை, தர்மபிரகாஷ் மண்டபத்தில் நடைபெற்ற

சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தில் வெளியிடப்பட்டது.

நூல்விளக்கக் குறிப்பு

நூலின்பெயர், தலைப்பு	:	பத்திரகாளீ தீப பூசையும் தேவீபாராயண துதிதிரட்டும்
நூலின் துறை	:	சாக்தசமயத்துறை
நூலின் வகை	:	ஆகமமரபுசார்ந்த தொகுப்புநூல்
நூலின் பொருள்	:	தேவீவழிபாடும் துதிகளும்
நூலின் மொழி	:	ஸம்ஸ்கிருதம் & தமிழ்
நூலின் எழுத்து	:	தமிழ் எழுத்துமட்டில்
தொகுப்பு & வடிவமைப்பு	:	சிவஸ்ரீ.வி.சோமசேகர சிவாசார்யர்
நூலின் பதிப்புரிமை	:	நூலாசிரியருக்கே உரியது.
கணிணி அச்சுபதிப்பு	:	கிரிஜா கணேஷ், சென்னை.
நூல் அளவு	:	8.5" x 5.5"
அச்சிட்ட எண்ணிக்கை	:	1000 பிரதிகள்
முதற்பதிப்புகாலம், ஆண்டு	:	நவம்பர் 2019
நூல் பதிப்பு எண்.	:	முதற்பதிப்பு
நூலின் பக்கங்கள்	:	152 பக்கங்கள்
வெளியீடு	:	சிவாசார்யார் அறக்கட்டளை,சென்னை-1 சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட், சென்னை-1.
வெளியீட்டு நூல்வரிசை	:	25
அச்சகம்	:	ஓம் டிஜி ஒர்க்ஸ், சென்னை-40.
வெளியிடுவோர்	:	சிவஸ்ரீ தி.ஸா. சதாசிவோம் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ Dr. தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
வெளியீட்டு விழா	:	சைவாகம கலாசார தீபிகோத்ஸவம்
வெளியிட்ட நாள்	:	07-11-2019
புத்தகத்தின் விலை	:	விலை ரூ.150/-
புத்தகம் கிடைக்கும் இடம்	:	அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	:	98402 99352 / 99402 01849

All rights relating to this work rest of the copyright. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without prior written permission of the writer of this book.

Chief Editing - Layout & Compiled by : V. Somasekara Gurukkal M.A.,

உ

குருவருள் துணை

நூல் முகவுரை

ஜ்வாலா கராள மத்யுக்ர மசே ஷாசுர ஸூதனம்.
திரிசூலம் பாது நோ தேவி பத்ரகாளி நமோஸ்துதே.

பரம்பொருளானது பராசக்தியோடு பிரியாதிருப்பது. பரஞ்ஜோதியே காளீ. ஸ்ரீகாளிதேவியே தசமஹாவித்யா தேவிகளில் முதலாவதாக உள்ளவள். காளியே மஹாவித்யா இவளே பிரம்மவித்யா எனப்படும் சக்தி.

உலகெலாம் படைத்து காத்து அருளாட்சி செய்திடும் பெரியநாயகி பகவதி பத்திரகாளி அம்மையே. தேவியின் வழிபாடு ஒன்றே அனைத்தினும் மேம்பட்ட அருஞ்செயலாம். அவள்மட்டுமே நாம்விரும்புமனைத்தையும் அளிக்கக்கூடிய வல்லமை உடையவள்.

"புருஷார்த்தப்ரதா பூர்ணா போகினீ புவனேச்வரீ" என்று லலிதாவை புராணம் புகழ்ந்துரைக்கிறது. இவளை ஆராதித்தலே உலகில் போகம் சுவர்க்கம் முக்தி அனைத்தையும் தரவல்லது. நடேசப்பெருமான் தனது இடது பக்க சக்திபாதத்தையே எடுத்துஉயர்த்தி, இதுவே முக்திக்குவழி என்று தனது இடதுகையால் உணர்த்துகிறார். போகம் மோக்ஷம் தருபவள் காளியே.

இதனை "ஆராதிதா ஸைவ நிருணாம் போக ஸ்வர்க்கா பவர்கதா" என்று சப்தசதீ கூறும். காளீ என்பவள் காலனின் சக்தியாய், கருணையின் வடிவமாய், அறம்காத்திட உக்ரரூபம் கொண்டுள்ளவளாய், "சிவஞான ப்ரதாயினீ" என்று அறியப்படுகிறாள். வெள்ளி, செவ்வாய், கிழமைகளிலும், அஷ்டமி, நவமி, சதுர்தசி, அமாவாசை அல்லது பௌர்ணமி திதிகளிலும், திருவாதிரை, உத்திரம், பூரம், மகம் முதலிய நக்ஷத்திரங்களிலும் செய்யும் காளிபூசையானது சிறப்புடையது. காளியை வழிபடுவதுஒன்றே மூவுலகிலும் அனைத்து தெய்வங்களையும் வழிபட்டதாகும்) உருவச்சிலை, கலசம், யந்திரம், சூலம், கத்தி அல்லது பெரியதீபம் இவற்றில் காளியை பூசைசெய்வது சிறப்பான பயனைத்தரும். சாக்தாகம தந்த்ரநூல்களில் கூறப்பட்டுள்ள செய்முறையின் படி, வழிபடுவது கலியுகத்தில் இஷ்டஸித்தியை தருவதாகும். ஆதலால் தேவீ ஆலய பூசாரிகளும், வீட்டு சுவாஸினிப் பெண்களும், சிலையிலோ, குத்துவிளக்கிலோ, பகவதி பத்திரகாளியைப் பூசைசெய்தும், அவள்முன் அமர்ந்து அவளுக்கு பிரியமான அருள்தரும் அரியபல தோத்திரங்களை படித்தும், பாடியும், ஜபம், பாராயணம் செய்தும், மகிழ்வித்து எளியமுறையில் அருள்பெறலாம். இதற்கு ஏற்றவகையில் பத்திரகாளீதீபபூஜையின் செயல்முறையையும், தேவீ பாராயணத்திற்கு உகந்த தோத்திரங்களின் தொகுப்பையும் குருவருளால் சிறுநூலாக தொகுத்துள்ளோம். இந்நூல் எந்நாளும் எங்கும் எல்லா தேவீவழிபாட்டிற்கும் உதவும் என்பதில்

ஐயம்வேண்டாம். இதில் உள்ள துதிகளிலேயே முடிவில் அந்தந்ததுதிகளின் பயன்களும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இந்நூலைப் பாராயணம்செய்வோர் பதினாறுபேறும் பெற்று, பெருவாழ்வு வாழ்ந்து, பேரின்பநிலையை அடைவர் என்கிறது அறநூல். தேவீமாஹாத்மியத்தில் தேவியின்திருவாக்கால் கூறியுள்ளவாறு அஷ்டமி, நவமி அல்லது வெள்ளி செவ்வாய் நாட்களில் இரவில் இத்துதிகளை திருவிளக்கின்முன் பக்திசிரத்தையுடன் ஓதியபின்பு பலமுறைபணிந்து வணங்கி விரும்பும்பயனை நாம் வரமாக வேண்டி பெற்றிடலாம்.

அஷ்டம்யாம் ச சதுர்தச்யாம் நவம்யாம் சைகசேதஸ:
ச்ரோஷ்யந்தி சைவ யே பக்த்யா மம மாஹாத்மிய முத்தமம்.
– (தேவீமஹாத்மியம்)

எனவே ஸ்தோத்திரபிரியா எனப்படுபவளான தேவிக்கு, சுவாசினிகள் பூசைசெய்வது விருப்பமானது. எனவே திருவிளக்குபூசையை, நீராடி, தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்ட, கணவனும் மகனும் உள்ள பெண்கள் அமர்ந்து, திருவிளக்கேற்றி, பூசித்து, பாலில் தேன்கலந்து பழத்துடன் நிவேதனம் செய்து முடித்து, பிறகு ஒரு சுமங்கலியை அல்லது திருமணமாகாத பத்துவயதுக்குட்பட்ட குமாரியை மணப்பலகையில் அமரவைத்துப் பூசித்து, பின்பு அவர்கள் பயன்படுத்துகின்ற மங்களகரமான சோபனப்பொருட்களையும், ஆடையையும் அப்பெண்ணிற்கு தானமாக அளித்து மகிழ்வித்து, பின்பு தேவியிடம் இதனை விண்ணப்பித்து, ஆரத்திஎடுத்து முடிக்கவும். சரத்ருதுகாலத்தில் அதுவும் கார்த்திகைமாதத்தில் வருகிற அஷ்டமி திதியில் இப்பூசையை செய்வது விரைவில் இஷ்டஸித்திதரும். கலியுகத்தில் விரைவில் அருளும் க்ஷிப்ரபிரஸாதினி காளியே. ஆதாரமாக விளங்கும் மூவுலகிற்குமான ஒரேதாய் காளியே. புவி முக்திஹேது: என்கிறது துதிநூல். இந்நூலில் லோக மாதாக்களாக அருள்தரும் பலவகைப் பெண்தெய்வங்களுக்கு உரிய துதிகளும், குறிப்பாக, துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி, சண்டி, காளி, பிரத்யங்கிரா, புவனேச்வரீ முதலான தேவிகளின் எளியநடை துதிகள் மந்திரமாலையாக தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. இதனை சுவாஸினிகள் நித்யபாராயணம் செய்து தீர்கசுமங்கலியாக வாழலாம். சென்னையில் அருள்தருளம் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் காளிகாம்பாள் சாந்தரூபமாயும், பரிவாரத்தில் பத்ரகாளி உக்ரரூபமாயும், பிரத்யங்கிரா அஸ்திரசக்தியாகவும் இருந்து அருள்கின்றாள். அங்கு விசேஷதினங்களில் நடைபெறும் காளிகாம்பாள் விளக்குபூசைக்கு இந்நூல் ஏற்றதாக உதவும் என நம்புகிறேன். Dr. சிவஸ்ரீ. தி.ஷ.சாம்பமூர்த்தி சிவாசார்யார் அவர்களின் குமாரர்களால் நிர்வகிக்கப்பட்டுவருகின்ற அறக்கட்டளைகள் வாயிலாக இச்சிறுநூல் வெளியிடப்பட்டிருப்பது போற்றத்தக்கது. இந்நூலை வெளியிட்டு அறம்வளர்க்கும் இந்தஅறநிலயத்தாருக்கும், இந்நூலை வாசித்துப்பயன் படுத்துகிற வாசகர்களுக்கும் காளிதேவியின் திருவருள் கிடைத்திடவேண்டி, எனது இஷ்டதெய்வமான ஸ்ரீ சாஸ்தாவின் திருவடிகளைப் போற்றிப் பணிந்து, வேண்டி அன்பர்களை வாழ்த்தி மகிழ்கிறேன்.

"துர்காம் தேவீம் சரண மஹம் ப்ரபத்யே."

இப்படிக்கு
S.V.V. சோம சேகர சிவாசாரியார்,
சென்னை.

சுபம்

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சென்னை-1, சிவாசார்யர் அறக்கட்டளையின் நிறுவனர்

சிவஸ்ரீ. Dr. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யார் சரிதம்

தருமமிகு. சென்னையின் திருமழிசை திருத்தலத்தில் கௌசிககோத்திரத்தில் ஆதிசைவகுலத்திலே சிவஸ்ரீ. ஷண்முக குருக்களுக்கும், ஸ்ரீமதி. தாக்ஷயணி அம்மையாருக்கும், 3வது திருமகனாக அவதரித்தவர். சென்னை பூக்கடை சிவஸ்ரீ.சபாரத்ன சிவாசார்யாரிடம் சிவதீக்ஷை பெற்றவர். குருவருளாலும், திருவருளாலும் சென்னை கடற்கரைநகரில் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் தமது சகோதரர்களுடன் சிறந்த அர்ச்சகராய் வெகுகாலம் தொண்டாற்றியவர். மேற்படி ஆலயத்தில் தமது பெருமுயற்சியால் பலசிறப்புமிக்க திருப்பணிகளைச்செய்து, ஆலயவளர்ச்சிப் பணிகளில் தம்மை முழுவதும் இவ்வாலயத்திற்கு அர்ப்பணித்து பலமுறை கும்பாபிஷேகங்களைச் செய்வித்தவர். தனது ஆத்மார்த்த சிவபூசையை இடையறாதுசெய்து, சிவநெறியில் வாழ்ந்தவர். தமது வாழ்க்கைத் துணைவியாராக ஸ்ரீமதி. புவனேச்வரி அம்மையாரை மணந்து மகன்களோடும், மகள்களோடும் மனநிறைவுடன் வாழ்ந்தவர்.

தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தலைவராக பலஆண்டுகள் இருந்து அர்ச்சக சமூகத்தின் மேன்மைக்குத் தொண்டாற்றியவர். தமதுஆலயத்திலும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல இடங்களில்

பலவகை யாகங்களையும், சஹஸ்ரசண்டீ யாகங்களையும் நடத்தியவர். ஆலயசேவார்த்திகளுக்கும், அயல்நாட்டின் ஆஸ்தீகர்களுக்கும் இந்துசமய சுபாஷிதங்கள்ளையும், சித்தாந்த கருத்துக்களையும் போதித்த சைவசமயபோதகர். ஆலயசேவார்த்திகளின் மனத்துயரம் நீங்கிட அம்பாளிடம் கசிந்துருகி அர்ச்சனைசெய்து, தேவியின் திருநாம உச்சரிப்பால் நாதகலைகளை ஆலயமெங்கும் பரவச்செய்த தேவீஉபாஸகர். சேவார்த்திகளுக்கு 'அம்பாள் ஆசீர்வாதம்'' எனக்கூறி குங்குமம்அளித்து, மங்களம்பெறச் செய்த மஹிமை பொருந்தியவர். கோயிலுக்குவரும் பக்தர்களில் ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், நல்லவர், தீயவர் என்ற வேறுபாடுஎதுவும் பாராமல், சமநோக்கில் தாயன்புகாட்டி உதவி, ஆசிநல்கிய ஆசான். பல்லோராலும் சிவாசார்யகுலபூஷணம் என்றும், சக்திகருணாகர சக்ரவர்த்தி என்றும் விருதுவழங்கிப் போற்றப்பட்டவர். பக்தர்களுக்கு தன் தீபாராதனைத்தட்டிலிருந்து குங்குமத்தையும், எளியோருக்கு பரிவுடன் பணத்தையும் எடுத்துத்தந்திடும் தயாளகுணத்தவர். முப்பதுக்கும்மேற்பட்ட வெளிநாடுகளில், பலகோயில்களில், ஆசியுரையாற்றியும், கும்பாபிஷேகம், யாகம் இவற்றைசெய்தும், செய்வித்தும், இந்துசமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்.

அமெரிக்காவிலுள்ள ஐக்கியநாடுகள்சபையில், இந்துசமய சிறப்பைப்பற்றி, சொற்பொழி ஆற்றியவர். தனது நான்குகுமாரர்களையும், ஆலய மற்றும் சமயப்பணிகளில் அமர்த்தியும், அறக்கட்டளைகளை ஏற்படுத்தி சைவாகம கலாசாரவளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தும் வழிகாட்டியவர். தேசபொதுநலனுக்காக அச்வமேதயாகம், ஸஹஸ்ரசண்டீயாகம் முதலிய அரிய பல பெருவேள்விகளைச் செய்து உலகஅமைதிக்கு துணைநின்று கௌரவமுனைவர் பட்டம் பெற்ற ஆகமஞானகலாநிதி ஆவார். இன்றும் சிவபுரத்துச் சிவனடிநிழலில் சிவபோகம் அனுபவித்தவாறு, குமாரர்கள்மூலமாக அறக்கட்டளைகளை ஆசியளித்து இயக்கிவருகிறார். இவரது சைவசமய சேவையைஎண்ணிப் போற்றிடும் ஆஸ்தீகர்கள் அம்பாள் ஆசீர்வாதம் பெற்றவர்களாய் இன்புற்று வாழ்கின்றனர். வாழ்க சீர்அடியார் எல்லாம்.

சுபம்.

வெளியீட்டுரை.

மாதா மரகத ச்யாமா மாதங்கீ மத சாலினீ.
குர்யாத் கடாக்ஷம் கல்யாணீ கதம்பவந வாஸினீ.

எல்லாம் வல்ல எம்பெருமாட்டி தாய் காளிகாம்பாளின் திருவருட் பயனால், உலகமக்களிடையே தெய்வபக்தி மேலோங்கி வளரவேண்டும். இந்து சமய ஸநாதனதர்மம் தழைக்கவேண்டும், என்றநோக்கில் எமது அறக்கட்டளையின் மூலமாக சமய ஆன்மீக பொதுநல சேவைகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். இதில் குறிப்பாக எங்களது குருநாதரும், எமதுஅறக்கட்டளையின் கௌரவஆலோசகரும், மார்கதர்சியுமான சிவஸ்ரீ.வி.சோமசேகரசிவாசார்யர் அவர்கள் எழுதித் தொகுத்தளித்த தெய்வீகநூல்களை வெளியிட்டு சைவசமயம் மற்றும் ஆதிசைவசமூக மக்களுக்கு அறப்பணியாற்றி வருகிறோம்.

இதன் ஓர் அங்கமாக ஆலயங்களில் விழாக்காலங்களில் படிப்பதற்கும், செய்கின்ற பரிகாரபூஜைகளின் போதும், நம் வீட்டில் செய்யப்படுகிற வெள்ளி, செவ்வாய்கிழமைகளின் தேவீ பூசையின் போதும், நவராத்திரி முதலியவிரதநாட்களிலும், திருவிளக்கின்முன் படித்துப்பயன்பெற உதவும் வகையில் அமைந்துள்ளதால் "பத்ரகாளீ தீப பூஜையும், தேவீபாராயண துதி திரட்டும்" என்கிற இந்நூலை எங்களது தமையனார் சிவஸ்ரீ.டி.ஸா.ஸதாசிவோம் சிவாசாரியர் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு நடைபெறும் சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தில் யாம் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். ஆஸ்தீக அன்பர்கள் புத்தக வாசகர்கள் யாவரும் இந்நூலை வாங்கி பயன்படுத்தி பயனடையவேண்டுகிறோம். அம்பாள் ஆசீர்வாதம்.

இப்படிக்கு

04.11.2019

சாக்தச்செம்மல்

சிவஸ்ரீ. T.S.S. காளிதாஸ் சிவாசார்யர்.
ஸ்ரீகாளிகாம்பாள்ஆலய ஆசார்யர், சென்னை–1.

பத்ரகாளீ தீப பூஜையும் தேவீபாராயண துதிதிரட்டும்

பொருளடக்கம்

வ.எண்.	விவரம்	பக்கம்
	பத்ரகாளீ தீப பூசைப்பகுதி	
1.	இறைவணக்கம் (தமிழ் துதிகள்)	10
2.	தீபநமஸ்கார ஸ்துதி	11
3.	கோமாதா ஸ்துதி	12
4.	இஷ்டதேவதா வந்தனம்	13
5.	விக்னேச்வர பூஜை	15
6.	தேவீ பீடபூஜை	20
7.	பத்ரகாளீ தீப பூஜை	25
8.	காளீ அங்கபூஜை	34
9.	நாமார்ச்சனை	36
10.	நக்ஷத்ர நாமார்ச்சனை	36
11.	தூபதீப நிவேதனாதிகம்	37
12.	நவாவரணபூஜை	44
13.	காளீகர ஆயுதபூஜை	46
14.	பலிதான பிரார்த்தனா	47
15.	புஷ்பாஞ்ஜலி பஞ்சோபசாரம்	48
16.	தோரக சூத்திர ரக்ஷாபூஜை	51
17.	க்ஷீரதர்ப்பணம்	53
18.	சுவாசினீ பூஜை	53
19.	ஸ்தோத்திர வந்தனாதிகம்	55
20.	காளீஅஷ்டோத்தரசத நாமார்சனம்	61
21.	காளராத்ரீ சப்தசுலோகீ	63
22.	பத்ரகாளீ ப்ரணதிபஞ்சகம்	63
23.	சியாமளா நவரத்ன மாலிகா	64
24.	பிரத்யங்கிரா ஸ்துதி	64
	தேவீஸ்தவ பாராயணப்பகுதி	
25.	தேவீ விசேஷஸ்தோத்ராணி	65
26.	பவானீ ஸ்தவம்	67
27.	சாமுண்டீஸ்தவம்	68
28.	புவனேசீ அஷ்டகம்	69
29.	அர்க்கள ஸ்தோத்ரம்	70
30.	துர்கா கவசம்	72

31. துர்கா நாமஸ்துதி	73
32. சண்டீ ஸப்தச்லோகீ	74
33. பிரார்த்தனா பஞ்சகம்	76
34. விந்தியவாஸிநீ அஷ்டகம்	77
35. சாமுண்டா மங்கள ஸ்தோத்ரம்	78
36. மங்களசண்டிகா ஸ்தோத்ரம்	80
37. அம்பா ஸ்தோத்ரம்	82
38. தேவீ ப்ரணதி (24 நமஸ்காரஸ்துதி)	86
39. மஹிஷாசுரமர்தினி ஸ்தோத்ரம்	89
40. மஹாலக்ஷ்மி அஷ்டகம் (அகஸ்தியரின் துதி)	95
41. நவதுர்கா ஸ்துதி	97
42. அஷ்டலக்ஷ்மீ பாலனஸ்துதி	98
43. சாரதாஷ்டகம்	101
44. வாக்வாதினீ ஸ்தோத்ரம்	103
45. ஸரஸ்வதீ ஸ்தோத்ரம்	105
46. ஸரஸ்வதீ துவாதசநாம ஸ்தோத்ரம்	107
47. சாரதாம்பா ஸ்தோத்ரம்	108
48. ஸரஸ்வதீ வரப்ரார்த்தனா	109
49. லோகமாத்ரு ஸ்துதிதசகம்	110
50. நாராயணீ மாத்ரு ஸ்துதி தசகம்	112
51. தேவீ ஸ்தோத்ர ரத்னாவளீ	114
52. காமாக்ஷீ ஸ்துதி பஞ்சகம் (தமிழ் உரையுடன்)	122
53. மீனாக்ஷீ ஸ்துதி பஞ்சகம் (தமிழ் உரையுடன்)	124
54. பார்வதீ ஸ்துதி பஞ்சகம் (தமிழ் உரையுடன்)	126
55. சரஸ்வதீ ஸ்துதி பஞ்சகம் (தமிழ் உரையுடன்)	128
56. துர்கா ஸ்துதி பஞ்சகம் (தமிழ் உரையுடன்)	130
57. லக்ஷ்மீ ஸ்துதி பஞ்சகம் (தமிழ் உரையுடன்)	132
58. அபீதகுசாம்பா ஸ்துதி (தமிழ் உரையுடன்)	133
தேவீ துதிப்பாடல் பகுதி (தமிழ்)	
59. காமாக்ஷி துக்கநிவாரணி துதி	136
60. கருமாரி கற்பூரநாயகி துதி	139
61. துர்கையம்மன் ராகுகால துதி	142
62. ஜெயதுர்கை துதி	144
63. பத்ரகாளீ திருவருள் மாலை 4 பாடல்	145
64. காளியம்மா வரதாதுதி (பிரத்யங்கிரா கும்மி பாட்டு)	147
65. வாழ்த்துப் பாடல்கள்	149

உ

1. இறைவணக்கம்

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானைப் பதம் பணிவாம்.

உண்ணாமுலை உமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மன்னார்ந்தன வருவித்திரண் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணமறுமே.

கற்பனை கடந்தஜோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைசிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள்
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

மின்னாயிரம் ஒருமெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகமகிழ் ஆநந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவதொன்றில்லையே.

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கேபரம் எனக்கு உள்ளம் எல்லாம்
அன்றே உனதுஎன்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான்பெற்ற கோமளமே.

2. தீபநமஸ்கார ஸ்துதி.

(காலைமாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம்செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

சுபம் பவது கல்யாணி! ஆயுராரோக்ய ஸம்பதாம்.
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே.

***

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ச்ரீ:

***

3. கோமாதாஸ்துதி. (பசுவணக்க துதி)

இந்த அபூர்வமான ஸ்தோத்ரத்தைச் சொல்லி கோபூஜை செய்து, பிரதக்ஷிணம் செய்தால் அளவற்ற புண்யமாகும். சகல பாக்யங்களும் ஏற்படும். வாசக அன்பர்கள் பயன் பெறவேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவிருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம:. 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

. . . .

சாமுண்டா ஜயார்களா
ஸ்தோத்திர மஹாமந்திரம்

(வெற்றிதுதி)

ஜய த்வம் தேவி! சாமுண்டே! ஜய பூதார்த்திஹாரிணி!
ஜய ஸர்வகதே! தேவி! காலராத்ரி நமோஸ்துதே!

4. இஷ்டதேவதாவந்தனம்

ஓங்காரவணக்கம்

ஓங்காரம் பிந்துஸம்யுக்தம் நித்யம் த்யாயந்தி யோகின:.
காமதம் மோக்ஷதம் சைவ ஓங்காராய நமோ நம:.

ஸ்ரீ விக்னேச்வரர் துதி:

கஜாநநம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோகவிநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாதபங்கஜம்

ஸ்ரீ நடராஜர் துதி

க்ருபாஸமுத்ரம் சுமுகம் த்ரிணேத்ரம்
ஜடாதரம் பார்வதி வாமபாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்தமூர்த்திம்
சிதம்பரேசம் ஹ்ருதி பாவயாமி.

குமாரசாமி துதி

உமா கோமள ஹஸ்தாப்ஜ
ஸம் பாவித லலாடகம்
ஹிரண்ய குண்டலம் வந்தே
குமாரம் புஷ்கரஸ்ரஜம்.

நவகிரஹ துதி

நமஸ் சூர்யாய ஸோமாய மங்களாய புதாய ச.
குரு சுக்ர சனிப்யஸ்ச ராஹவே கேதவே நம:.

ஸ்ரீ மஹாசாஸ்தா துதி.

ஆசானுரூப பலதம் சரணாரவிந்த
பாஜாமபார கருணார்ணவ பூர்ணசந்த்ரம்
நாசாய ஸர்வ விபதா மபி நௌமி நித்யம்
ஈசான கேசவபுவம் புவனைக நாதம்.

லோகாபி ராமம் ரண ரங்க தீரம்.
ராஜீவ நேத்ரம் ரகுவம்ச நாதம்.
காருண்யரூபம் கருணாகரம் தம்.
ஸ்ரீராமசந்த்ரம் சரணம் ப்ரபத்யே.

குருவந்தனம்

குரும் கணபதிம் ஸ்கந்தம் ஸாம்பம் ச பரமேச்வரம்.
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே.



பகவதி பூஜாகல்பம் (பூசைசெயல்முறை)

மங்களம் திசது மே விநாயகோ மங்ளம் திசது மே ஷடானன:.
மங்களம் திசது மே மஹேச்வரீ மங்களம் திசது மே மஹேச்வர:.

பூஜைசெய்பவர், ஆசமனம்செய்து விக்னேச்வரபூஜையை செய்ய வேண்டும்.

5. விக்னேச்வர பூஜை

ஓம் சுக்லாம்பர தரம் விஷ்ணும் சசி வர்ணம் சதுர்புஜம்.
பிரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே.

ஓம் என்றுகூறியவாறு விநாயகரைஎண்ணியபடி ஐந்துமுறை தலையில்இருகைவிரல் முட்டிகளால் குட்டிக்கொண்ட பின்பு மூச்சுப்பயிற்சியை (பிராணாயாமம்) ஒருமுறை செய்தபிறகு, வலதுகாதில் இருப்பதாக கங்கையைக்கருதி, வலதுகையினால் தனது வலதுகாதைத் தொட்டபின்பு, கையில் மஞ்சள்நிறமான சோபனாக்ஷதையை சிறிது எடுத்துக்கொண்டு, பூஜையின் தேசகால நோக்கங்களைக்கூறி ஸங்கல்பம் செய்துகொண்டு பூஜையைத் துவங்கவேண்டும்.

தீர்த்த பாத்திரத்தில் நீர் நிரைத்து அதில் சந்தனம் மலர்கள் பச்சரிசிகளைப் போட்டு ஓம் என்று 7 முறை கூறி கங்கையை அதில் சேர்ந்ததாகக்கருதி புனித தீர்த்தத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும்.

ஸங்கல்பம் செய்யும்முறை:

ததே³வ லக்னம் சுதி³னம் ததே³வ
தாராப³லம் சந்திரபலம் ததேவ
வித்யாபலம் தைவபலம் ததேவ
கௌரீ பதேர் அங்க்ரியுகம் ஸ்மராமி.

ஓம் ஹரஹர நமப் பார்வதீபதயே – ஹரஹர மஹாதேவ. சம்போ! சங்கர! சிவசிவ! ஹரே! கிருஷ்ணா! ராமா! கோவிந்தா! மாதவ! கேசவ! கோபால!

"மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வராக்ஞயா பரமேச்வர ப்ரீத்யர்த்தம். அத்யபூர்வோக்த ஏவங்குண விசேஷேண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுப4திதௌ, (கரிஷ்யமாணஸ்ய கர்மண:) ஸ்ரீ காளிகாம்பாயா: தீப பூஜாகர்ம நிர்விக்னேன பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ விக்னேச்வரபூஜாம், ஹரித்ராகணபதிபூஜாம் கரிஷ்யே" என்றுஸங்கல்பம் செய்துகொண்டபிறகு, ஒரு தாம்பாளத்தில் அல்லது நுனிவாழைஇலையில் அல்லது வெற்றிலையில் மஞ்சள்பொடியை நீருடன்பிசைந்து, கூம்புவடிவில் பிடித்துவைத்து பூஜைக்காக பிள்ளையாரை செய்துவைத்து, அதன் உச்சியில் அருகம்புல்லை வைத்து, அதில் விக்னேச்வரரை ஸகலஉபசாரத்துடன் பூஜிக்கவும். கையில் சந்தனத்தில்தோய்த்த உரியமலரை வைத்துக்கொண்டு கணபதியை மனதில் கீழ்காணுமாறுகூறி தியானிக்கவும்.

கஜாநநம் சந்திர ஸமான வர்ணம்
ஸ்வதந்த பாசாங்குச லட்டுகானி.
ஹஸ்தைர் ததானம் கமலா ஸனஸ்தம்
விக்னேச்வரம் நௌமி ஸதா ப்ரஸன்னம்.

இவ்விதம் உருவத்தை எண்ணியபின்பு அஸ்மின் ஹரித்ராம்பிம்பே சுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி ஓம் க3ம் க3ணபதயே நம: என்றுமந்திரம்கூறி அம்மலரை மஞ்சள்பிள்ளையாருக்கு அணிவிக்கவும்.

1. ஓம் மஹா கணபதயே நம: இதி மஹாகணபதிம் ஆவாஹயாமி, என்றுகூறி ஆவாஹனத்தை பூபோட்டு முதலில் செய்யவேண்டும். பிறகு, ஷோடசோபசாரபூஜையை முறையே செய்திடவேண்டும்.

2. ஓம் மஹா கணபதயே நம: ஆஸனம் ஸமர்ப்பயாமி (அக்ஷதையை சுவாமி பீடத்தில் சேர்க்கவும்)

3. ஓம் மஹா கணபதயே நம: பாத்யம் ஸமர்ப்பயாமி (2முறை நீரைதெய்வத் திருவடியில் சேர்க்கவும்)

4. ஓம் மஹா கணபதயே நம: அர்க்கியம் ஸமர்ப்பயாமி (1முறை நீரைசிரசில் சேர்க்கவும்)

5. ஓம் மஹா கணபதயே நம: ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (3முறை நீரைகையில் அளிக்கவும்)

6. ஓம் மஹா கணபதயே நம: ஸ்நானம் கல்பயாமி (3 முறை நீரை தெளிக்கவும்)

7. ஓம் மஹா கணபதயே நம: ஸ்நானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (3 முறை நீரை சேர்க்கவும்)

8. ஓம் மஹா கணபதயே நம: வஸ்த்திரயுகளார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (அக்ஷதைகளை ஆடைகளுக்காக திருமேனியில் சேர்க்கவும்)

9. ஓம் மஹா கணபதயே நம: உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (பூணூலுக்காக அக்ஷதைகளை சேர்க்கவும்)

10. ஓம் மஹா கணபதயே நம: ஆபரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (அக்ஷதைகளை அணிகலன்களுக்காக சேர்க்கவும்)

11. ஓம் மஹா கணபதயே நம: கந்தான் தாரயாமி (அசல் சந்தனசாந்தை திலகமாய் இடவும்)

13. ஓம் மஹா கணபதயே நம: சோபானாக்ஷதான் ஸமர்ப்பயாமி (சந்தனப்பொட்டின்மீது நெல்மலர்அரிசியை அக்ஷதைகளை சாத்தவும்)

14. ஓம் மஹாகணபதயேநம: ஹரித்ராகுங்குமம் ஸமர்ப்பயாமி (கணபதிக்கு குங்குமப்பொட்டு வைக்கவும்)

15. ஓம் மஹா கணபதயே நம: புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி (கணபதிக்கு பூமாலையை அணிவிக்கவும்)

16. ஓம் மஹா கணபதயே நம: பத்ரபுஷ்பநாமார்சனாம் ஸமர்ப்பயாமி (அருகு பில்வம் இவற்றுடன் உரியமலர்களால் 16முறை பெயர்கூறி பூசிக்கவும்)

1. ஓம் ஸுமுகாய நம: 2. ஓம் ஏகதந்தாய நம:
3. ஓம் கபிலாய நம: 4. ஓம் கஜகர்ணகாய நம:
5. ஓம் லம்போதராய நம: 6. ஓம் விகடாய நம:
7. ஓம் விக்னராஜாய நம: 8. ஓம் விநாயகாய நம:
9. ஓம் தூமகேதவே நம: 10. ஓம் கணாத்யக்ஷாய நம:
11. ஓம் பாலசந்திராய நம: 12. ஓம் கஜானனாய நம:

13. ஓம் வக்ரதுண்டாய நம:14. ஓம் சூர்பகர்ணாய நம:

15. ஓம் ஹேரம்பாய நம: 16. ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம:

ஓம் ஸ்ரீ ஸித்திவினாயக மூர்த்தயேநம: நானாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி. என்றுகூறி சமர்பிக்கவும் தூபம் தீபம் இவற்றை காண்பிக்கவும்)

17. ஓம் மஹாகணபதயே நம: – தூபம் ஆக்ராபயாமி (தூபப்புகை நறுமணத்தை முகரச் செய்யவும்)

18. ஓம் மஹாகணபதயே நம: – ஆஜ்யதீபம் தர்சயாமி (நெய்தீபத்தை மூன்றுமுறை முகத்திற்குநேராக மும்முறைசுற்றி காட்டவும்)

19. ஓம் மஹாகணபதயே நம: தூபதீபானந்தரம் ஆசமனீயம் ஸமர்பயாமி என்று கூறியவாறு (மூன்று முறை நீரை எதிரில்) சேர்க்கவும்

20. ஓம் மஹாகணபதயே நம: நாளிகேரகண்ட த்வயம் குளக்கண்டம் கதலீபலம்ச நிவேதயாமி. என்றுகூறி (உடைத்த தேங்காய்துண்டுகள், வாழைப்பழம், வெல்லக்கட்டி இவைகளை) படைத்திடுதல்வேண்டும்.

21. ஓம் மஹாகணபதயே நம: நிவேதனானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (முன்புபோல 3முறை நீர்வார்க்கவும்)

22. ஓம் மஹாகணபதயே நம: – கற்பூரதாம்பூலம் ஸமர்ப்பயாமி (வெற்றிலைப்பாக்குகளை ஏலம்சேர்த்துஅளிக்கவும்)

23. ஓம் மஹாகணபதயே நம: – மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி (3முறை இருகைகளால் புஷ்பாஞ்ஜலியை செய்யவேண்டும்)

24. ஓம் மஹாகணபதயே நம: – ஸுவர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி (பொன் பூ அல்லது நாணயத்தை அர்பணித்து சாத்துக)

25. ஓம் மஹாகணபதயே நம: கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி. (கற்பரத்தை ஏற்றி ஜோதியை சுற்றிக்காட்டி ஆரத்தி செய்க)

26. ஓம் மஹாகணபதயே நம: ஸமஸ்த உபசாரார்த்தே அக்ஷதான் ஸமர்ப்பயாமி. (அக்ஷதைகளை எல்லாவகை உபசரிப்புகளுக்காக ஸமர்ப்பித்திடவேண்டும் துதிசெய்து வணங்கியபின்பு விரும்பும்பயனை வேண்டிடவேண்டும்.)

27. ஓம் மஹாகணபதயே நம: புஷ்பாஞ்ஜலிம்ஸமர்ப்பயாமி
அகஜானன பத்மார்க்கம் கஜானனம் அஹர்நிசம்.
அனேகதம் தம் பக்தானாம் ஏகதந்த முபாஸ்மஹே.

என்று கூறி மூன்று முறை மலர் தூவி துதி அஞ்ஜலியைச் செய்யவேண்டும்.

28. ஓம் மஹாகணபதயே நம: பிரார்த்தனாம் ஸமர்ப்பயாமி.
வக்ரதுண்ட மஹாகாய கோடிசூர்ய ஸமப்ரப.
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா.

இவ்வாறுகூறி இடையூறுகள் அகலவேண்டியபின்பு, இவரது சந்நதியில் கையில் அக்ஷதையை எடுத்துக்கொண்டு விசேஷபூசைக்காக ஸங்கல்பம்செய்து கொண்டு பிறகு அதை இடதுபுறத்தில் வெளியே போடவேண்டும்.

29. மஹாஸங்கல்பம்: (காளீபூஜைக்கானஉறுதிமொழிஏற்பது.)

(கணபதி முன்நிலையில் விசேஷ பூஜைக்கு உரியஸங்கல்பம் செய்தல்)

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வராக்ஞயா ஸ்ரீபரமேச்வர, ஸ்ரீபரமேச்வரீ ப்ரீத்யர்த்தம், சுபே சோபனே முகூர்த்தே, அத்யப்ரம்மண: த்விதீய பரார்த்தே, ச்வேதவராஹகல்பே, வைவஸ்வத மன்வந்தரே, அஷ்டாவிம்சதிதமே கலியுகே, ப்ரதமேபாதே, ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரதகண்டே, மேரோர் தக்ஷிணபார்ச்வே, சகாப்தே, அஸ்மின், வர்த்தமானே, வ்யவஹாரிகே, ப்ரபவாதீனாம் ஷஷ்டிஸம்வத்ஸராணாம் மத்யே, ... நாமஸம்வத்ஸரே, ... அயனே, ... ருதௌ, ... மாஸே, ... பக்ஷே, ... சுபதிதௌ, ... வாஸரயுக்தாயாம், ... நக்ஷத்ரயுக்தாயாம் சுபயோக, சுபகரண, ஏவங்குண, விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் .... சுபதிதௌ, அஸ்மாகம் ஸஹகுடும்பானாம் க்ஷேமஸ்தைர்ய, வீர்ய, விஜய, ஆயுராரோக்ய, ஐச்வர்யாணாம் அபிவிருத்யர்த்தம், இஷ்டகாம்யார்த்த ஸித்யர்த்தம், ஸமஸ்த துரிதோபசாந்தியர்த்தம், ஸர்வாரிஷ்ட நிவாரணார்த்தம், ஸர்வானுகூல ஸித்யர்த்தம், சிந்தித மனோரதபல அவாப்த்யர்த்தம், ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்விதபல புருஷார்த்த ஸித்யர்த்தம், ஸ்ரீ பத்ரகாளீ ப்ரஸாதஸித்யர்த்தம், ஸ்ரீ பத்ரகாளீப்ரஸாதாத் மம ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம், மம அப்ராப்தலக்ஷ்மீ ப்ராப்த்யர்த்தம், ப்ராப்தலக்ஷ்மியாஸ் சிரகால ஸம்ரக்ஷணார்த்தம், ஸ்ரீ பத்ரகாளீ பூஜாம் தீபபூஜாம் கரிஷ்யே.

இவ்வாறுகூறி ஸங்கல்பத்தை செய்து முடித்து, பிறகு தன் கைஅக்ஷதையை தனக்கு இடதுபுறத்தில் தரையில் போட்டுவிட்டு, பாத்ரஜலத்தைத் தொடவும்.

30. கணபதி யதாஸ்தானம் செய்தல்

பிறகு கையில் புஷ்பாக்ஷதையை எடுத்துக்கொண்டு கணபதியின் மந்திரத்தைக்கூறியபடி ஓம் மஹா கணபதயே நம: அஸ்மாத் ஹரித்ராபிம்பாத் ஸ்ரீ மஹா கணபதிம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி என்றுகூறி முன்பு பூஜித்த மஞ்சள்பிள்ளையாரில் அந்த அக்ஷதையைப்போட்டு கணபதியை வழிஅனுப்பியதாகக் கருதியபின்பு, அத்தாம்பாளத்தை வடக்காக நகர்த்தவும்.

31. கணபதி அருட்பிரசாதம் ஏற்றல்

பூசித்த ஸ்ரீ மஹாகணபதியின் பாதத்திலிருந்து புஷ்பம் அக்ஷதையை அருட்பிரஸாதமாக எடுத்து தனது சிரஸில் அணிந்துகொள்ளவும். கணபதியின் அருள்ஆசியுடனும் அனுமதியுடனும் உரியதான சிறப்புபூஜையை தீபத்தில் காளீவழிபாட்டைத் துவங்கவேண்டும். அதன் செய்முறைஇதுவேயாகும்.

(ஸ்ரீவிக்னேச்வர பூசை முற்றும்)

6. தேவீ பீட பூஜை

1. ஆசமனம் (உடல் புனிதத்திற்கு மும்முறை நீர்பருகுதல்)

ஆத்மதத்வம் சோதயாமி ஸ்வாஹா – அருந்துதல்
வித்யாதத்வம் சோதயாமி ஸ்வாஹா – அருந்துதல்
சிவதத்துவம் சோதயாமி ஸ்வாஹா – அருந்துதல்
ஸர்வதத்வம் சோதயாமி ஸ்வாஹா – வாய்துடைத்தல்

12 உறுப்புகளை பிரணவத்தை கூறியவாறு தொடுவது முறை.

2. குருவந்தனம் (குருவை த்யானம்செய்து வணங்குதல்)

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:
ஸ்ரீகுருப்யோநம:, பரமகுருப்யோநம:, பரமேஷ்டிகுருப்யோ நம:
ஸ்ரீமத் ஸத்குரு சரணாரவிந்தாப்யாம் நம:

3. குலதேவதா வந்தனம் (குலதெய்வத்தை எண்ணி வணங்குதல்)

ஷண்முகம் ஷட்குணம் சைவ குமாரம் குல பூஷணம்.
தேவஸேநாபதிம் வந்தே ஸர்வகார்யார்த்த ஸித்தயே.

என்றுகூறி குலதெய்வமாக முருகனை வணங்கி (அல்லது அவரவர்களுடைய குலதெய்வத்தை) ஒருமுறை அவரை மனதில் எண்ணித் துதிக்கவேண்டும்.

4. மஹாகணபதிம் ப்ரார்த்தயேத் விக்னநிவாரணாய என்ற வசனப்படி பிறகு மஹாகணபதியை எண்ணித் துதித்து வணங்கவும்.

வக்ரதுண்டமஹாகாய ஸூர்ய கோடிஸமப்ரப

நிர்விக்னம் குருமே தேவ ஸர்வகார்யே ஷு ஸர்வதா.

5. ஆத்மரக்ஷை (தேஹரக்ஷை, பூசிப்பவரின் பாதுகாப்பு)

"ஓம் நமோ பகவதீ பத்ரகாளீ மாம் ரக்ஷ ரக்ஷ."

என்றுகூறி தனது இதயத்தில் தனதுகையை வைத்துக்கொண்டு மூன்றுமுறை எண்ணி ஜபிக்கவும். ஸ்ரீமாதர்மாம் ரக்ஷரக்ஷ.

6. ஸாக்ஷிதீப பூஜை.

(வலதில் நெய்விளக்கும், இடதில் நல்லெண்ணைவிளக்கும், வைக்கவும்.) இருபக்கத்திலும்

தீபலக்ஷ்மீ மற்றும் தீபதுர்கைகளின் பூசை.

இருபக்கமுள்ள இருகுத்துவிளக்குகளில் வலதுபுறத்தில் ஒன்றில் ஓம் ஸ்ரீம் தீபலக்ஷ்மியை நம: என்றும், இடதுபுறத்தில் மற்றொன்றில் ஓம் தும் தீபதுர்காயை நம: என்றும் அதன் கூறித் திருவடியில் புஷ்பாக்ஷதைகளை வைத்து பின்பு பிரதானமான மையதீபத்தை ஏற்றி அதனை வணங்கவும் வேண்டும்.

தீபவந்தனமந்திரம்.

போ தீப ப்ரம்மரூப த்வம் கர்மஸாக்ஷீ ஹ்யவிக்னக்ருத்.
யாவத் பூஜா ஸமாப்தி ஸ்யாத் தாவத் ப்ரஜ்வல ஸுஸ்திர.1

சுபம் பவது கல்யாணி ஆயு ராரோக்ய ஸம்பதாம்.
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே. 2

மங்களே மங்களாதாரே மாங்கல்யே மங்களப்ரதே.
மங்களார்த்தம் மங்களேசி மாங்கல்யம் தேஹிமே ஸதா. 3

ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதகே.
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே. 4

தீபதேவி மஹாதேவி சுபம் பவது மே ஸதா.
யாவத் பூஜா ஸமாப்தி ஸ்யாத் தாவத் ப்ரஜ்வல ஸுஸ்திரா. 5

7. **கண்டாபூஜை** கைமணிக்கு சந்தனம் பூவைத்து வேண்டுக.

ஜகத் துவனிர் மந்த்ர மாதர் ஸர்வதேவ ப்ரியங்கரீ.
தைத்ய வித்வம்ஸிநீ கண்டே ரக்ஷ மாம் சப்தரூபிணீ.

ஹே கண்டே ஸுகரே பீடே கண்டாத்வனி விபூஷிதே.
வாதயந்தி பரானந்தே கண்டாதேவீம் ப்ரபூஜயேத்.

ஆக^{2}மார்த்தம் து தே^{3}வானாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம்.
கண்டாரவம் கரோம் யத்ர தேவதாஹ்வான லாஞ்சனம்.

இவ்வாறு கூறியபடி வலதுகையினால் பூஜாங்கமான கைமணியைப் பூசித்துபிறகு எடுத்து மும்முறை மணிஅடிக்கவும்.

8. **கலசபூஜை** (பஞ்சபாத்திரத்து நீரில் தொட்டவாறு கூறுதல்)

(சங்குதீர்த்தபூஜை / கங்காபூஜை) ஒரு உலோகபாத்திரத்தில் தூயநீரை நிறைத்து, அதில் சந்தனம், புஷ்பம், அக்ஷதை, இவைகளைப்போட்டு, அதைதொட்டுக்கொண்டு கீழ்காணுமாறுகூறி புனிதத்திற்காக ஜபிக்க வேண்டும்.

கலசஸ்ய முகே ருத்ர: கண்டே விஷ்ணுஸ் ஸமாச்ரித:.
மூலே தத்ர ஸ்திதோ ப்ரும்மா மத்யே மாத்ருகணா ஸ்மிருதா:.
குக்ஷௌ து ஸாகராஸ் ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா.
ருக்வேதோத யஜுர்வேத: ஸாமவேதோப் யதர்வண:.
அங்கைஸ்ச ஸஹிதாஸ் ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:.
ஆயாந்து தேவ பூஜார்த்தம் துரித க்ஷய காரகா:.
கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி.
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு.

(மூலமந்திரத்தோடு கூடிய காயத்ரீமந்திரத்தைக் கூறியவாறு) இவ்வாறுகூறி மந்திரித்த புனிதநீரை ஒரு உத்தரிணியில் கையில் (கலசதீர்த்தத்தை) எடுத்துக்கொண்டு, பூஜைக்காக வைத்திருக்கும் புஷ்பம் முதலிய பொருட்களையும், காளீதேவிஉருவத்தையும், (தீபத்தை / யந்திரத்தை /

கும்பத்தை பிம்பத்தை) தன்னையும், மேலே தெளித்தபடி ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும். இவ்விதமே பசுவினுடைய பால், தயிர், நெய், சாணம், ஜலம், தர்பைமுனைகள் இவற்றை ஒருகிண்ணியில் ஒன்று சேர்த்துவைத்து சிவனுடைய பஞ்சபிரம்ம மந்திரத்தால் மந்திரித்துத், தெளிப்பதால், இடம், பொருள், ஆத்மா, இலக்குருவம் இவைகள் தூய்மைபெறுவதாகும்.

9. சங்கபூஜா (விசேஷ அர்கியதீர்த்த பரிகல்பனம்)

த்வம் புராஸாகரோத் பன்னோ விஷ்ணுனா வித்ருதக் கரே.
தேவைஸ்ச பூஜிதஸ் ஸர்வை : பாஞ்சஜன்ய நமோஸ்துதே.

இவ்வாறுகூறி சங்கினைப்போற்றி வணங்கிடுக. அதில் பயன் பாட்டுக்காக நீரை நிறைத்து, பூஜைக்கு உரிய முக்ய மந்திரங்களைக் கூறி அதனை மந்திரிக்க வேண்டும். அதாவது

ஓம் சூர்யமண்டல த்வாதச கலாப்யோ நம:
ஓம் சந்திரமண்டல ஷோடச கலாப்யோ நம:
ஓம் அக்னிமண்டல தசகலாப்யோ நம:
ஓம் ஸப்தஸாகர நதீப்யோ நம:

என்று கூறியபின்பு அந்த சங்குதீர்த்தத்தால் பூசைக்கான பொருட்களை மேலே தெளித்து புனிதப்படுத்துக.

10. ஆத்மபூஜை (தன்னை தேவியாகக் கருதுவது)

பூஜகர் தமது உடலும் உள்ளமும் இறைவனோடு இரண்டறக் கலந்து மீண்டும் விளங்குவதாகக்கருதி தாம்வழிபடப்போகும் தெய்வஉருவிலேயே தாம் விளங்குவதாகக்கருதித் தன்னைத்தானே பூ அணிந்து பூஜித்து, தெய்வம்போல் அலங்கரித்துக்கொள்ளவேண்டும். ஆத்மபூஜையை

ஓம் ஆத்மனே நம:, ஓம் அந்தராத்மனே நம:,
ஓம் ஞானாத்மனே நம:, ஓம் ஜீவாத்மனே நம:,
ஓம் கலாத்மனே நம: ஓம் தத்வாத்மனே நம:,
ஓம் பூதாத்மனே நம:, ஓம் ப்ராணாத்மனே நம:,
ஓம்ஸர்வாத்மனே நம:, ஓம் பரமாத்மனே நம:

என்றுகூறி பூஜித்து, தனது இதயத்தில் சந்தனம் அக்ஷதையினால் "ஸமஸ்தோபசாரான் ஸமர்ப்பயாமி" என்றுகூறி இதயகமலத்தில்

பரதேவதையையெண்ணி அர்ச்சித்துக்கொள்ளவேண்டும் இதுவே ஆத்ம பூசையாகும்.

11. பீடபூஜை (ஆஸனபூஜை) (இருக்கையின் தெய்வாம்ச வழிபாடு)

பூஜைக்காகஉள்ள இலக்கான தெய்வ உருவத்திற்குக்கீழே, பீடத்தின் நடுவே, ஒன்றன்மேலொன்றாக, இருப்பதாகக்கருதி இவைகளைப் பூசிக்கவும். சந்தனம் அக்ஷதையுடன் பூவைஎடுத்து நாமா ஒவ்வொன்றுக்கும் ஒன்றாக பீடத்தில் வைக்கவும். அந்த பீடத்தை –

ஓம் ஸகலகுணாத்ம யோகபீடாத்மனே நம: என்று கூறி பூவைத்து பூசித்து. அதில்

1. ஓம் ஆதாரசக்த்யை நம:
2. ஓம் மூல ப்ரக்ருத்யை நம:
3. ஓம் ஆதி கூர்மாய நம:
4. ஓம அனந்தாய நம:
5. ஓம் பூம்யை நம:
6. ஓம் சூர்யமண்டலாய நம:
7. ஓம் சந்திரமண்டலாய நம:
8. ஓம் அக்னிமண்டலாய நம:
9. ஓம் சக்தி மண்டலாய நம:
10. ஓம் ஸகல தத்வாத்மக ஸர்வசக்தியுக்த கமலாஸனாய நம:
11. பூர்வாத்யஷ்ட தளேஷு வாமாதி அஷ்டசக்திப்யோ நம:
12. பஞ்சகிருத்ய காரணேசயுக்த திவ்ய சிம்மாஸநாய நம:

இவ்வாறுகூறி காளிதேவியை அழைத்து இருத்தவுள்ள இடத்திற்கு அர்ச்சனையை செய்யவும்.

12. பத்மதளசக்தி பூசை பின்பு அந்த பூத்ததாமரைமலரின் எட்டு இதழ்களில் கீழ்காணும் எட்டுசத்திகளை பீடசக்திகளாக கருதிபூசிக்கவும்.

1. ஓம் ஜயாயை நம: **2. ஓம் விஜயாயை நம:**
3. ஓம் அஜிதாயை நம: **4. ஓம் அபராஜிதாயை நம:**
5. ஓம் நித்யாயை நம: **6. ஓம் விலாஸின்யை**
7. ஓம் தோக்த்ரியை நம: **8. ஓம் அகோராயை நம:**

பூவின்மையகர்ணிகையின் ஈசானத்தில் ஓம் மங்களாயை நம: என்று பூசிக்கவும். பிறகு அதில் ஸ்ரீபகவதீ பத்ரகாளீ தேவியை தியானித்து பூசிக்க வேண்டும்.



தக்ஷிணாமூர்த்தி (ஆலடிச்செல்வர்)



சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் மூலவர்

7. பத்திரகாளீ தீப பூஜை

அந்த தேவீ பீடத்தில் பகவதி பூஜையை செய்யவும். (செயல்வரிசை முறை 1 முதல் 81 வரைசெய்க.) திருவிளக்கில் பகவதி பத்திரகாளியை கருதுவது. தியானம் செய்வது ஆகும். அதற்குஉரிய தியானம்

1. பத்ரகாளீ ரூபத்யானம்.

ஏகவக்த்ராம் த்ரிநயனாம் சதுர்புஜ ஸமன்விதாம்.
ஜடாமகுட ஸம்யுக்தாம் அர்தசந்த்ர கலாதராம்.
சிரோமாலா விபூஷாட்யாம் கர்ணகுண்டல மண்டிதாம்.
ஸ்தனகஞ்சுக ஸம்யுக்தாம் நீலவர்ணாம் சுயௌவனாம்.
கட்கம் ச தக்ஷிணே ஹஸ்தே கபாலம் வாம ஹஸ்தகே.
டமரும் சூல மேவோக்தம் ஊர்த்வ ஹஸ்தே ச தாரிணீம்.
பீதாம்பர பரீதானாம் மேகலா (ஆ)பரணோ ஜ்வலாம்.
வீர நூபுர பாதாப்ஜாம் வக்ர தம்ஷ்ட்ராம் பயாநகாம்.
அட்டஹாஸ மஹா பீமாம் அஷ்ட பைரவ பூஜிதாம்.
அஷ்டமாத்ருக மத்யஸ்தாம் மஹா(அ)சுர விநாசிநீம்.
ஸர்வாயுத சுசோபாட்யாம் பக்தாபீஷ்ட ப்ரதாயிநீம்.
த்ரிகோண பிந்து பீடஸ்தாம் ஹ்ரீம்கார மந்த்ர நாயிகாம்.
காளீம் பூதகணைஸ் ஸேவ்யாம் மஹாபத்ராம் விசிந்தயேத்.

(அல்லது)

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம்
ஸம்பிப்ரதீம் சந்திரகலா வதம்ஸாம்.
பிங்கோர்த்வ கேசீம் ஸிதபீம தம்ஷ்ட்ராம்
பூயாத் விபூத்யை மம பத்ரகாளீ.

இவ்வாறு இந்த உருவத்தியானத்தைக்கூறி தனது அஞ்ஜலிகையில் மலர்வைத்துக்கொண்டு தேவியின் ஆவாஹனத்தைச் செய்யவேண்டும்.

2. ஆவாஹனம். (எண்ணியஉருவத்தில் காளியை அழைத்தல்)

(தேவியை அழைத்து பூசையின் இலக்கு உருவத்தில் வெளிப்படுத்துதல்) தியானித்தபூவை விளக்கில்வைத்து சேர்த்து தேவியை அழைத்திடவும்.

காளி! காளி! மஹாகாளி! காளிகே! சங்கர ப்ரியே!.
ஸமாகச்ச சிவே! பத்ரே! பூஜார்த்தம் பக்த வத்ஸலே. 1
மஹாபத்ம வனாந்தஸ்தே! காரணானந்த விக்ரஹே!.
ஸர்வ பூத ஹிதே! மாத:! ஏஹ் யேஹி பரமேச்வரி!. 2
ஆகச்ச காளிகே! தேவி! அஷ்டாபிஸ் சக்திபிஸ் ஸஹ.
பூஜா பாகம் க்ருஹா ணேமம் ஸாந்நித்ய மிஹ கல்பய. 3
ஆகச்ச த்வம் மஹாபாகே ஸர்வகல்யாண ஹேதவே.
மம சத்ரு விநாசாய சங்கர ப்ராண தாயிநி. 4

என்ற 4 சுலோகங்களைக்கூறி தீபத்தில் 4 மலரைச் சேர்க்கவும்.

3. ஸ்தாபனம். (காளியை அங்கேயே நிலைபெற வேண்டுதல்)

ஏஹ் யேஹி தேவ தேவேசி த்ரிபுரே தேவ பூஜிதே.
பராம்ருத ப்ரியே சீக்ரம் ஸான்னித்யம் குரு ஸித்தயே. 1
தேவேசி பக்தி சுலபே பரிவார ஸமன்விதே.
யாவத் த்வாம் பூஜயிஷ்யாமி தாவத் த்வம் சுஸ்திரா பவ. 2

4. ஸந்நிதானம். (காளியை தன்னையே நோக்கி இருந்திடவேண்டுதல்)

ஸ்ரீ காளிகே இஹ சுப்ரதிஷ்டிதா பவ என்றுகூறி பிராணப்ரதிஷ்டையை செய்யவேண்டும்.

காளி! ஸர்வ ஜகன்மாத:! யாவத் பூஜாஅவஸானகம்.
தாவத் த்வம் ப்ரீதி பாவேன தீபே(அ)ஸ்மின் ஸந்நிதா பவ.

என்றுகூறி அஸ்மின் தீபே (கடே/சக்ரே) ஸாங்காம், ஸாயுதாம், ஸவாஹனாம், ஸசக்தி ஸபரிவாராம், ஸர்வாலங்கார பூஷிதாம், தக்ஷயக்ஞவிநாசிநீம், மஹாகோராம், யோகினீகோடி பரிவ்ருதாம் ஸர்வதேவதாஸ்வரூபிணீம், பகவதீம், பத்ரகாளீம் ஆவாஹயாமி

என்றுகூறிகையிலுள்ள ஆவாஹனபுஷ்பத்தை பூசிக்கஉள்ள மூர்த்தியின் தலைஉச்சிநடுவே மேலேவைத்து ஆவாஹனத்தை செய்க. ஓம் காளிகாயை வித்மஹே ச்மசான வாஸின்யை தீமஹி தந்நோ கோரா ப்ரசோதயாத் இந்த காளீகாயத்ரீ மந்திரத்தையோ, காளியின் மூலமந்திரத்தையோ ஆவாஹன செயலுக்கு உபயோகிக்கலாம். இவ்வாறு ஆவாஹனபுஷ்பத்தைக் தேவிக்கு கொடுத்து, தேவியை தன்னைநோக்கியவாறு செய்து பூசை முடியும்வரை பொருத்திருக்க வேண்டிடவேண்டும்.

5. ஆஸனம் (தேவிக்கு அமர்ந்திட இருக்கையை ஸமர்ப்பித்தல்)

தேவி! காளி! மஹாபத்ரே! ஞானமார்க்கப்ரதே! சிவே!.
ஆஸனம் தவ பூஜார்த்தம் க்ருஹாண த்வம் மஹேச்வரி!.
ஆஸனம் பாஸ்வரம் துங்கம் மாங்கல்யம் ஸர்வமங்களே.
பஜஸ்வ ஜகதாம் மாத: ப்ரஸீத ஜகதீஸ்வரி.

ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை இதம் திவ்யம் ரஜதசிம்மாஸனம் ஸமர்ப்பயாமி என்று கூறி பூவைத்து முழுஅரிசியையும் வைக்கவும்.

6. ஸ்வாகதம் (நல்வரவுகூறி மதித்து அர்க்யமளித்தல்)

ஸ்வாகதம் தே மஹாகாளி! சாமுண்டே! ஸர்வமங்களே!.
பூஜாம் க்ருஹாண விவிதாம் ஸர்வகல்யாண காரிணி!.
க்ருதார்த்தோ(அ)னுக்ரஹீதோ(அ)ஸ்மி ஸபலம் ஜீவிதம் மம.
ஆகதா(அ)ஸி யதோ தேவி! மஹேச்வரி! மமாந்திகம்.

இதனைக்கூறி பக்தியோடு தேவிக்கு நல்வரவு ஆகுக எனத்தெரிவித்து, ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை இதம் ஸ்வாகதாஞ் ஜலிகுசுமம் ஸமர்ப்பயாமி. என்றுகூறி வரவேற்புக்கான புஷ்பாஞ்ஜலியை அளித்து, பிறகு ஒருமுறை அர்க்யஜலத்தை இதம் ஸ்வாகதார்கியம் என்றுகூறித்தரவேண்டும்.

7. பாத்யம் (தேவீபாதங்களில் தீர்த்தம் அளித்தல்)

மஹாகாளி! மஹாமாயே! சாமுண்டே! சங்கரப்ரியே!.
பாத்யம் க்ருஹாண தேவேசி பத்ரகாளி நமோஸ்து தே.
கங்காதி ஸலிலாதாரம் தீர்த்தம் மந்த்ராபி மந்த்ரிதம்.
தூரயாத்ரா ச்ரமஹரம் பாத்யம் தத் ப்ரதிக்ருஹ்யதாம்.

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யை இதம் பாத்யோதகம் ஸமர்ப்பயாமி என்று கூறி இருதிருவடிகளுக்கும் இருமுறையில் தீர்த்தம் சேர்க்கவும்.

8. அர்க்யம்.(புனிதநீர்வார்த்தல் ஒருமுறை தலையில் நீர்தெளித்தல்)

ஜகத்பூஜ்யே த்ரிலோகேசீ தைத்ய தானவ பஞ்ஜினி.
அஷ்டாங்கார்க்யம் க்ருஹாண த்வம் தேவி விச்வார்த்தி ஹாரிணி.
தில தண்டுல ஸம்யுக்தம் குச புஷ்ப ஸமன்விதம்.
சுகந்தம் பல ஸம்யுக்தம் ஸர்வம் தேவி க்ருஹாண மே.

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யை இதம் அர்க்யோதகம் ஸமர்ப்பயாமி.

9. ஆசமனம் (திருவாயில் மும்முறை குடித்திடகுடிநீரைத்தருதல்.)

ஸர்வலோகஸ்ய யா மாதா யா மாதா லோகபாவனி.
ததாமி ஆசமனம் தஸ்யைமஹாகாள்யை ப்ரயத்னத:. 1
ரக்தபீஜ வதோத்பன்ன ரக்தேந பரி த்ருப்திகே.
ததாமி ஆசமனம் துப்யம் பத்ரகாளி நமோஸ்து தே. 2
ஏலா லவங்க கற்பூர உசீராதி சுவாஸிதம்.
ததாமி ஆசமனம் துப்யம் ஜகத் தாத்ரியை நமோஸ்து தே. 3

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யை இதம் ஆசமனம் ஸமர்ப்பயாமி.

10. மதுபர்க்கம் (துயிர் தேன் நெய் முன்றையும் கலந்து பருகத்தருதல்)

மதுபர்க்கம் மஹாதேவி ! ப்ரம்மாத்யைர் கல்பிதம் தவ.
மயா நிவேதிதம் பக்த்யா க்ருஹாண பத்ரகாளிகே !.
கபிலா ததி குந்தேந்து தவளம் மது ஸம்யுதம்.
ஸ்வர்ண பாத்ர ஸ்திதம் தேவி மதுபர்க்கம் க்ருஹாண மே.

ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை இதம் மது பர்க்கம் ஸமர்ப்பயாமி.

11. உத்வர்த்தனம். (திருமேனிக்கு சுகமேற்படுத்துவது) சுகந்தமானதாக எண்ணைக் காப்பை செய்து தேவீதேஹத்திற்கு இதமளிப்பதாகும்)

திலதைல ஸமாயுக்தம் சுகந்தி த்ரவ்ய நிர்மிதம்.
உத்வர்த்தன மிதம் தேவி ! க்ருஹாண த்வம் ப்ரஸீத மே.

தேவிக்கு மூலிகைமணமுள்ள கூந்தல்தைலத்தை பூசுதல்.
ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை தைலஉத்வர்த்தனம் கல்பயாமி.

12. ஸ்நானம் (திருமஞ்ஜனமாகிய நீராட்டும் உபசரிப்பு செய்தல்)

ஞானமூர்த்தே பத்ரகாளி திவ்யமூர்த்தே சுரேச்வரி.
ஸ்நானம் க்ருஹாண தேவேசி தீர்த்தோதக ஸமன்விதம்.
கமாபப் ப்ருதிவீ சைவ ஜ்யௌதிஷம் வாயுரேவ ச.
லோகஸம்ஸ்மிருதி மாத்ரேண வாரிணா ஸ்நாபயாம்யஹம்.
ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை சுத்தோகஸ்நானம் கல்பயாமி.

பஞ்சாம்ருதம். (ஐவகையான இனிப்புடைய அமுதக்கலவையை அளித்தல்)

பயோ ததி க்ருதைர் யுக்தம் சர்க்கரா மது ஸம்யுதம்.
பஞ்சாம்ருதம் க்ருஹ ணேதம் பத்ரகாளி நமோஸ்துதே.
ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை பஞ்சாம்ருதஸ்நானம் கல்பயாமி.

கங்காதீர்த்தஸ்நானம். (தூய நதிநீராட்டுதல்/முழுக்காட்டுதல்)

ஹேமகும்ப ஸ்திதம் ஸ்வச்சம் கங்காதி ஸரிதா ஸ்ருதம்.
ஸ்நானார்த்தம் ஸலிலம் காளி க்ருஹ்யதாம் குலசுந்தரி.

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யைநதீஜல ஸ்நானம்கல்பயாமி (அபிஷேகம் செய்ய இயலாத உருவங்களில் நீரைத்தெளித்து பஞ் சாமிருதத்தை அப்பொழுது நிவேதனம்செய்து மும்முறை தீர்த்தத்தை ஆசமனமாக அளிக்கவும்)

புனராசமனீயகம் (மீண்டும் பருகிட மும்முறை வாயில் நீர்அளித்தல்)

ஸ்நானாதிகம் விதாயாபி யதஸ் சுத்தி ரவாப்யதே.
ஏதத் ஆசமநீயம் ஹி காளிதேவி ப்ரக்ருஹ்யதாம்.
ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை ஸ்நாநானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி என்று கூறி மூன்றுமுறை திருவாயில் தீர்த்தம்தந்திடவும்.

13. வஸ்த்ரயுகளம் (ஆடையை மேலாடையுடன் அளித்தல்)

(புடவையுடன் கூடிய சட்டைஎன்று இருஆடைகளையும் அர்ப்பணித்தல்)
திவ்யாம்பர யுகம் ஸூக்ஷ்மம் கஞ்சுகம் ச மனோஹரம்.
பீதாம்பர தரே காளி க்ருஹா ணேதம் மயார்ப்பிதம்.

பட்டசேலம். (பட்டுப்புடவையை (பட்டுசேலையை) ஸமர்ப்பித்தல்)

வஸ்த்ரம் ஸ்வச்சம் மஹாஹியம்பே! பட்டசூத்ர விநிர்மிதம்.
க்ருஹாண சுபகே! தேவி! துகூலம் மே சுரார்ச்சிதே.

பட்டகஞ்சுகம் (மேலாடையாக பட்டுசட்டைத்துணியை ஸமர்ப்பித்தல்.)

யாமாச்ரித்ய மஹாதேவோ ஜகத் ஸம்ஹாரகஸ் ஸதா.

தஸ்யை தே பரமேசான்யை கல்பயாமி உத்தரீயகம்.

இதம் த்விதீய வஸ்த்ரம் கஞ்சுகம் ஸமர்ப்பயாமி. என்றுகூறிதரவும்

தந்து ஸந்தான ஸம்பூதம் கலா கௌசல கல்பிதம்.

ஸர்வாங்காபரணம் ச்ரேஷ்டம் வஸனம் பரிதீயதாம்.

ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை பரிதான வஸ்த்ரயுகளம் ஸமர்ப்பயாமி. தலையை மூடும்ராணிப்பட்டை அளித்திடவும்.

புடவையுடன் சட்டைத் துணியை அணிவிக்கவும். (பீதாம்பரம்=மஞ்சள் நிறஆடை அல்லது ரக்தாம்பரம்=சிகப்புநிற ஆடை)

14. உபவீதம். (பொன்னாலானபூணூலை ஸமர்ப்பித்தல்.)

தக்ஷகானந்த கார்க்கோட நாக யக்ஞோபவீதிநி!.
ஸ்வர்ண யக்ஞோபவீதம் தே ததாமி ஹரிவாஸனே!.

ஓம்நமோபகவத்தை பத்ரகாள்யை நாகோபவீதம் ஸமர்ப்பயாமி என்றுகூறி பொன்னாலானபாம்புவடிவப்பூணூலை, அதில் நாகங்களைப்பூசித்து அணிவிக்கவும்.

15. மாங்கல்யசூத்ரம் (தாலிசரடைஅணிவித்தல்) (தாலிக்கயிறு)

மாங்கள்யமணி ஸம்யுக்தம் முக்தா வித்ரும ஸம்யுதம்.
தத்தம் மங்களசூத்ரம் ச க்ருஹாண சிவசங்கரி.

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யை மாங்கள்யசூத்ரகண்டாபரணம்ஸமர்ப்பயாமி என்று கூறி தேவீகழுத்திற்கு முதல்பூஷணமான தாலிநூல் கயிற்றை அணிவிக்கவும்.

16. ஆபரணாலங்கரணம். (திருவாபரணங்களை அணிவித்தல்)

ரத்ன தாடங்க கேயூர ஹார கங்கண பூஷிதே!.
பூஷணானி மஹார்ஹாணி க்ருஹாண கருணாநிதே!.
கிரீட ஹார கேயூர கடகா (அ)ங்குளி பூஷணைர்.
முக்தா மாணிக்க ஹாரைஸ் ச கடி நூபுர மண்டணை:
அன்யை ரனேக ஸாஹஸ்ர திவ்யாபரண பூஷணை:.
பூஷிதானி தவாங்கானி தேஹி மே ஸர்வஸம்பதம்.

ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை ஸகலஆபரணானிஸமர்ப்பயாமி.

எனக்கூறி, கிரீடம், காதுதோடு, முத்துசரம், மெட்டி, கைவளையல், இடைச்சரம், முதலிய திருவாபரணங்களைக்கொண்டு தேவியை அலங்கரிக்கவும். (பனை காதோலை சுருள் கருகமணி செட்தருதல்)

17. கந்தலேபனம். (செஞ்சந்தனச் சாந்துபூசுதல்)

கஸ்தூரீ குங்குமைர் யுக்தம் கற்பூரா (அ)கரு ஸம்யுதம்.
கந்தான் தே ப்ரதாஸ்யாமி கீர்த்திகந்தம் குருஷ்வ மே.

மலயாசல ஸம்பூதம் நாநா கந்த ஸமன்விதம்.
சீதளம் பஹுளாமோதம் சந்தனம் க்ருஹ்யதாமிமம்.

கற்பூர சந்தனோ பேதம் கஸ்தூரீ குங்குமான்விதம்.
ஸர்வகந்தம் க்ருஹாணாத்ய ஸர்வமங்கள தாயிநி!.

ரக்தானு லேபனம் தேவி! ஸ்வயம் தேவ்யா ப்ரகாசிதம்.
தத் க்ருஹாண மஹாபாகே! சுபம் தேஹி நமோஸ்து தே.

ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை ஸர்வகந்தானுலேபனம் கல்பயாமி.

நறுமணப்பொருள்களுடன் செஞ்சந்தனச்சாந்தை குழைத்து தேவீதிருமேனியில் பூசுவதைச்செய்யவும். (செஞ்சந்தனத்துடன் கஸ்தூரி குங்குமப்பூ பச்சகற்பூரம், அகில், பன்னீர் சேர்த்தது சந்தனக்கலவை)

18. ஸிந்தூரம். (உச்சிவகுட்டுக்கு மங்களப்பொடிபூசுதல்)

ஸிந்தூரம் ஸர்வ ஸாத்வீநாம் பூஷணாய விநிர்மிதம்.
க்ருஹாண வரதே! தேவி! பூஷணாநி ப்ரயச்ச மே

ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை சிரஸி அலங்கரணார்த்தம் இதம் ஸீமந்தஸிந்தூரசூர்ணம் ஸமர்ப்பயாமி என்றுகூறி செந்தூரச் சிவப்புப் பொடியை உச்சியில்வைக்கவும்.

19. குங்குமம். (மஞ்சள்திடம் மணமுள்ளபொடியால்திலகமிடல்)

ஜபாபுஷ்ப ப்ரபம் ரம்யம் நாரீ பால விபூஷணம்.
பாஸ்வரம் குங்குமம் ரக்தம் தேவி தத்தம் ப்ரக்ருஹ்யதாம்

ஹரித்ராசூர்ணஜம் திவ்யம் அருணம் கேச வேசகம்.
ஸிந்தூரம் நிடிலோர்த்வேது மங்களேசி க்ருஹாண மே.

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யை குங்குமாபரணதிலகம் கல்பயாமி என்று கூறி குங்குமப்பொட்டுவைத்து அலங்கரிக்கவும். **ஸ்த்ரைணஸௌபாக்யத்ரவ்யாணி கேசசோதினீதர்பண கங்கணாதீநி ஸமர்பயாமி** என்றுகூறி தேவிக்கு முகம்காணும் கண்ணாடி, சீப்பு வளையல்களையும் பிறபெண்மைக்கான பொருள்களையும் முன்னே வைக்கவும்.

20. அக்ஷதம் (முழுஅரிசிகளை சோபனாக்ஷதைகளை ஸமர்ப்பித்தல்)

அக்ஷதம் தான்யஜம் தேவி! ப்ரம்மணா நிர்மிதம் புரா.
ப்ராணதம் ஸர்வபூதானாம் க்ருஹாண வரதே சுபே.
சாலீஜாதான் சந்த்ரவர்ணான் ஸ்நிக்த மௌக்திக ஸந்நிபான்.
அக்ஷதான் தேவி க்ருஹ்ணீஷ்வ விரூபாக்ஷேச வல்லபே.
த்வத்பாத பத்ம யுகளே ப்ரணதோ (அ)க்ஷத ஸித்தயே.
அக்ஷதான் பீத வர்ணான் ச துப்யம் தேவி நிவேதயே.
ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை இமான்அக்ஷதான் ஸமர்ப்பயாமி.
சம்பாநெல்லின் வெள்ளைநிற முழுஅரிசிகளை சிரஸில் சேர்த்தல்.

21. புஷ்பமாலா (பூமாலையை சூட்டுதல்)

மல்லிகா மாலதீ ஜாதீ சதபுஷ்பைர் விசித்ரிதாம்
புஷ்பமாலாம் ப்ரயச்சாமி ஸங்க்ருஹாண மஹேச்வரி.

ஸாக்ஷதாம் சோத்தமாம் மாலாம் சந்தனாகரு சர்ச்சிதாம்.
க்ருஹாண த்வம் மஹாபாகே ப்ரஸீத வரதா பவ.

நாநா புஷ்ப விசித்ராட்யாம் புஷ்பமாலாம் சுசோபநாம்.
ப்ரயச்சாமி ஸதா பத்ரே க்ருஹாண பரமேச்வரி!

ஓம்நமோபகவத்யை பத்ரகாள்யை நாநாவித புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி என்றுகூறி பலநிறங்களில் உள்ள உரியமலர்வகையில் தொடுத்துள்ள கழுத்துக்கும் தலைகொண்டைக்குமான பூமாலைகளை அணிவிக்கவும்.

22. அஷ்டாங்கபுஷ்பாணி. (எட்டுவகைமலர்சாத்துதல்)

மந்தாரப் பாரிஜாதஸ் ச பாடலீ கேதகீ ததா.
மாலதீ மோகரம் சைவ சதபத்ராணி சம்பகம்.

புன்னாக ஜாதீ மல்யாதி புஷ்பஜாத விநிர்மிதம்.
புருஷார்த்தப்ரதே தாத்ரி புஷ்பமாலாம் க்ருஹாண மே.

சலத் பரிமளாமோதம் மத்தாளிகண ஸங்குலம்.
ஆனந்த நந்தனோத்பூதம் காள்யைதே குசுமம் நம:.

ஓம்நமோபகவத்யைபத்ரகாள்யை அஷ்டபுஷ்பாணி ஸமர்ப்பயாமி.

23. இஷ்டபுஷ்பார்பணம். (விருப்பமலர்சூட்டுதல்)

பிரம்ம விஷ்ணு சிவாதீநாம் த்ரோண புஷ்பம் ஸதாப்ரியம்.
தத் தே காளி ப்ரயச்சாமி ஸர்வ காமார்த்த ஸித்தயே.

ஸர்வதேவ ப்ரியதமம் ஸரோஜம் சம்பகாதிகம்.
கேதகீ வகுளம் தேவி இஷ்டபுஷ்பம் க்ருஹாண மே.

பிரம்மேச ஹரி தேவேந்த்ர ப்ரமுகாமர பூஜிதே.
சுமனோத்யான ஸம்பூத கரவீராணி ஸ்வீகுரு.

ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை விசேஷபுஷ்பாணி ஸமர்ப்பயாமி.

24. பில்வபத்ரம். (மூன்றிதழ்வில்வஇலைசாத்துதல்)

அம்ருதோத்பவம் ச்ரீவ்ருக்ஷம் மஹாதேவீ ப்ரியம் ஸதா.
பில்வபத்ரம் ப்ரயச்சாமி ஸங்க்ரஹாண மஹேச்வரி.

த்ரிதத்வரூபம் த்ரிதளம் த்ரிகுணம் ச த்ரிமூர்த்திகம்.
த்ரிகுணாயை த்ரிணேத்ராயை பில்வபத்ரம் ததாமி தே.

அம்ருதார்ணவ ஸம்பூதம் ச்ரீவ்ருக்ஷோத்தம் சிவப்ரியம்.
பில்வபத்ரம் ப்ரயச்சாமி பவித்ரம் தே மஹேச்வரி.

ஓம் நமோபகவத்யை பத்ரகாள்யை இதம் பில்வபத்ரம் ஸமர்ப்பயாமி. என்றுகூறி அமுதக்கடலிலிருந்துலக்ஷ்மியுடன் தோன்றிய மரமான வில்வமர இலைகளை பக்தியோடு சேர்க்க வேண்டும்.

25. அலங்கரணம்
(வளையல், பாதமெட்டி, கொலுசு இவற்றை சமர்ப்பித்தல்)

ஸௌவர்ணாதியலங்காரம் கங்கணாதி விபூஷிதம்.
ஹாரகேயூர யுக்தாநி நூபுராணி க்ருஹாண மே.

ஓம் நமோ பகவத்யை பத்ரகாள்யை நம: கரகங்கண பாதநூபுராதி பூஷணஅலங்கரணம் ஸமர்ப்பயாமி.

8. அங்க பூஜை

26. புஷ்பபூஜனம் (பலவகைப்பூக்களால் அங்கபூஜையை செய்தல்)

1. ஓம் பத்ரகாள்யை நம: – பாதௌ பூஜயாமி (திருவடிகளில்)
2. ஓம் குருகுல்லாயை நம: – குல்பௌ பூஜயாமி (கணுக்கால்)
3. ஓம் ஜகத்தாத்ரியை நம: – ஜங்கே பூஜயாமி (முழங்கால்)
4. ஓம் ஜயந்தியை நம: – ஜாநுநீ பூஜயாமி (கால்முட்டிகள்)
5. ஓம் உக்ரக்ருத்யாயை நம: – ஊரூ பூஜயாமி (துடைகள்)
6. ஓம் கராளாஸ்யாயை நம: – கடிம் பூஜயாமி (இடுப்பு)
7. ஓம் குஹ்யகாள்யை நம: – குஹ்யம் பூஜயாமி (குறிமறைவிடம்)
8. ஓம் நிர்மலாயை நம: – நாபிம் பூஜயாமி (தொப்புள்)
9. ஓம் காமேச்வர்யை நம: – குக்ஷிம் பூஜயாமி (வயிறு)
10. ஓம் விசாலாக்ஷ்யை நம: – வக்ஷப் பூஜயாமி (மார்பு)

11. ஓம் ஷடங்கின்யை நம: – ஸ்தநௌ பூஜயாமி (மார்பகம்)
12. ஓம் கம்புகண்ட்யை நம: – கண்டம் பூஜயாமி (கழுத்து)
13. ஓம் ஸர்வாங்க சுந்தர்யை நம: – ஸ்கந்தௌ பூஜயாமி (தோள்)
14. ஓம் கட்க ஹஸ்தாயை நம: – ஹஸ்தான் பூஜயாமி (கைதலம்)
15. ஓம் கபாலின்யை நம: – பாஹூன் பூஜயாமி (கைகள்)
16. ஓம் சத்ரு நாசின்யை நம: – ச்ரோத்ரௌ பூஜயாமி (காதுகள்)
17. ஓம் வக்ர தம்ஷ்ட்ராயை நம: – வக்த்ரம் பூஜயாமி (வாய்)
18. ஓம் ஜ்வலத் ஜிஹ்வாயை நம: – ஜிஹ்வாம் பூஜயாமி (நாக்கு)
19. ஓம் த்ரிநேத்ராயை நம: – நேத்ராணி பூஜயாமி (கண்கள்)
20. ஓம் சஞ்சலாயை நம: – சிபுகம் பூஜயாமி (முகவாய்)
21. ஓம் பிம்போஷ்ட்யை நம: – ஓஷ்டம் பூஜயாமி (மேலுதடு)
குசோன்னதே குங்குமராக சோணே
புண்டிரேக்ஷு பாசாங்குசபுஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாதஹ

18. ஸ்ரீஅன்னபூரணிஅம்பா ஸ்வதம்

ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ணதர்வீம்
துக்தான்ன பூர்ணம் இதரேந கரேன பாத்ரம்
அன்னபிரதான நிரதாம் நவஹேமவர்ணாம்
அம்பாம் பஜே கனக பூஷண மால்ய சோபாம்

அன்னபூர்ணே! ஸதாபூர்ணே! சங்கரபிராணவல்லபே
ஆயுராரோக்ய மன்னம் ச தேஹி மே பரமேச்வரி

19. ஸ்ரீதுர்காம்பா ஸ்தவம்

மாதர் மே மதுகைடபக்னி மஹிஷப் பிராணாபஹாரோத்யமே
ஹேலா நிர்மித தூம்ரலோசனவதே! ஹே சண்டமுண்டார்திநி
நச்சேஷீகிருத ரக்தபீ ஜதநுஜே! நித்யே! நிசும்பாபஹே!
சும்ப த்வம்ஸிநி! ஸம்ஹராசு துரிதம் துர்கே நமஸ்தே(அ)ம்பிகே

20. ஸ்ரீகமலாம்பா ஸ்தவம்

அருண கமல ஸம்ஸ்தா தத்ரஜப் புஞ்ச வர்ணா
கர கமல த்ருதேஷ்டா(அ) பீதி ஹஸ்தாம்புஜா ச
மணிமகுட விசித்ரா (அ)லங்கிருதா கல்பஜாலைர்
பவது, புவனமாதா, ஸந்ததம் ஸ்ரீ ஸ்ரீயை நஹ

21. ஸ்ரீ மஹா மாரீ ஸ்தவம்

திரிணேத்ர யுக்தைகமுகீம் சுரக்தாம்
கபால பாசாம் திருத கட்க டக்காம்
வீராஸநஸ்தாம் அநலோர்த்வ கேசாம்
நமாமி மாரீம் உரகேந்திர சூடாம்.

சீதளே! த்வம் ஜகன் மாதா சீதளே! த்வம் ஜகத்பிதா
சீதளே! த்வம் ஜகத்தாத்ரி! சிதாளாயை நமோ நமஹ

22. ஸ்ரீ காளிகாம்பா ஸ்தவம்

கட்கம் கபாலம் டமரும் திரிசூலம்
கரைர் ததாநாம் ச கராளவக்த்ராம்
ரக்தேஷணாம் முக்தகசாம் ரிபுக்னாம்
சியாமாம் சுதம்ஷ்ட்ரீம் திரிபுராம் நமாமி.

23. அஷ்டபுஜா ஸ்ரீ ஜாதவேதஸீ துர்கா ஸ்வதம்

சங்கம்ச சக்ரம்ச சரம்ச சாபம்
கட்கம்ச கேடாப யதோரு ஹஸ்தாம்
கரைர் ததானாம் மஹிஷோத்தமாங்கே
ஸ்திதாம் பிரஸன்னாம் ப்ரணமாமி துர்காம்

24. ஸ்ரீ மஹாலக்ஷ்மீ கமலாம்பா ஸ்தவம்

மாதர் நமாமி கமலே! கமலாயதாக்ஷி
ஸ்ரீ விஷ்ணு ஹ்ருத்கமலவாஸினி! விச்வமாத
க்ஷீரோதஜே கமலகோமலகர்ப கௌரி
லக்ஷ்மி ப்ரஸீத ஸததம் நமதாம் சரண்யே

25. ஸ்ரீமஹாமாரீ (ரேணுகாம்பா) ஸ்தவம்

வாமே சூலகபால யுக்ம மிதரே கட்கம் குணம் டிண்டிமம்
பிப்ராணம் கரபங்கஜைஸ் திரிநயநாம் நாகாஷ்ட பூஷோஜ்வலாம்
நாநாகோடி யுகாந்த சூர்யஸதிருசீம் திவ்யாம்பரா லங்கிருதாம்
தக்ஷாலம்பித வாமநித்ரித பதாம் ஸ்ரீ ரேணுகாம் பாவயே

26. ஸ்ரீ ரேணுகாம்பா ஸ்தவம்

வந்தே நித்ய மபூர்வ வேஷ லலிதாம் கந்தர்ப்ப லாவண்யதாம்
தேவீம் தேவகணை ருபாஸ்ய சரணாம் காருண்ய ரத்னாகராம்
லீலாவிக்ரஹிணீம் விராஜிதபுஜாம் ஸத்சந்த்ர ஹாஸாதிபிர்
பக்தானந்த விதாயிநீம் ப்ரமுதிதாம் நித்யோத்ஸவாம் ரேணுகாம்.

27. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஸ்தவம்

வந்தே மாதரம் அம்பிகாம் பகவதீம் வாணீ ரமா ஸேவிதாம்
கல்யாணீம் கமனீய கல்ப லதிகாம் கைலாச நாதப் பிரியாம்

வேதாந்த ப்ரதிபாத்யமான விபவாம் வித்வன் மனோ ரஞ்ஜனீம்

ஸ்ரீசக்ராங்கித ரத்னபீட நிலயாம் ஸ்ரீராஜ ராஜேஸ்வரீம்

28. ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தவம்

ஸ்ரீவித்யே! சிவாமபாகநிலயே! ஸ்ரீராஜராஜார்ச்சிதே
ஸ்ரீநாதாதி குருஸ்வரூப விபவே! சிந்தாமணீ பீடிகே!
ஸ்ரீவாணீ கிரிஜா நுதாங்க்ரி கமலே! ஸ்ரீசாம்பவி! ஸ்ரீசிவே!
மத்யான்ஹே மலய த்வஜா திபசுதே! மாம் பாஹி மீனாம்பிகே!

29. ஸ்ரீ மூகாம்பிகா ஸ்தவம்

பாஸ்வத் ரத்னா பரண வஸநா லங்கிருதே! சாருஹஸ்தை
சங்கம் சக்ரம் வரத மபயம் ஸம்வஹந்தி! திரிணேத்ரி
ஹேமப் பிரக்யே ப்ரணத வர ஸந் தாத்ரி பத்மாஸனஸ்தே
காருண்யாத்ரே! பகவதி! மஹா லக்ஷ்மி! மாம் ரக்ஷ நித்யம்

30. ஸ்ரீ சூலினீ மாதா ஸ்வதம்

வந்தே ஹேம மஹோத்பலாஸநவரே! கன்யா ஜநாலங்கிருதே!
பஞ்ச பிரம்ம முகாமரைர் முனிகணைஸ் ஸேவ்யே! கன்மங்களே!
ஆஸீநாம் ஸ்மித பாஷிணீம் சிவஸகீம் கல்யாண வேஷோஜ்வலாம்
பக்தாபீஷ்ட வரபிரதான நிரதாம் விச்வாத்மிகாம் சூலிநீம்

31. ஸ்ரீ காத்யாயனீ ஸ்தவம்

கரகமல விராஜத் சக்ர சங்காஸி சூலா
பரிலஸித கிரீடா பாதிதா(அ)னேக தைத்யா
திரிநயந லஸிதாங்கீ திக்ம ரச்மி பிரகாசா
பவனஸக நிபாங்கீ பாது காத்யாயனீ ந

32. நவாக்ஷரீ துர்காஸ்துதி. (துர்கையம்மன் துதிகள்)

மாதர் மே மது^{4} கைடப^{4}க்னி மஹிஷ
ப்ராணாப ஹாரோத்யமே
ஹேலா நிர்மித தூ^{4}ம்ரலோசந வதே^{4}
ஹே சண்ட முண்டார்திநீ.
நிச்சேஷீ க்ருத ரக்தபீ^{3}ஜ த^{3}னுஜே
நித்யே நிசும்பாபஹே
சும்தி^{4} த்^{4}வம்ஸிநி ஸம்ஹராசு து^{3}ரிதம்
துர்கே நமஸ் தேம்பிகே.

33. நவதுர்கா நாமஸ்துதி.

துர்கே சூலினி ஜாதவேதஸி மஹா
சாந்தியாஹ்வயே சாபரி
ஜ்வாலா துர்கி வராபீ^{4}தே லவணகே
தீபாபீ^{4}தே ஹ்யாசுரி.
ஏஹ்யம்பே புரதோ மமாத்ய ப^{4}யக்ருத்
ரோகா^{3}ரி பீ^{3}டாதிமான்
வித்வஸ்தான் குரு தேஹி ஸௌக்ய மதுலம்
பக்திம் ததா வ்யாஹதாம்.

34. துர்காம்பாஸ்துதி.

அம்ப! ப்ரஸீத சகிண்ட விபூஷணாங்க
பாகஸ்திதே பவநிஹந்த்ரி மனோன்மனி த்வம்
யா பாஸி விச்வ விலய ஸ்திதி ஸ்ருஷ்டி கர்த்ரீ
விச்வம்பரா த்ரி மஹதாதி விசித்ர ரூபா.

35. விச்வேச்வரீ ஸ்துதி

யா மாயா மதுகைடப ப்ரமதினீ யா மாஹிஷோன் மூலனீ
யா தூம்ரேக்ஷண சண்டமுண்டமதினீ யா ரக்தபீஜாசனீ
சக்திஸ் சும்பா நிசும்ப துஷ்டதளனீ யா ஸித்திலக்ஷ்மீப் பரா
ஸா துர்கா நவகோடி சக்திஸஹிதா மாம் பாது விச்வேச்வரீ.

36. சிவதுர்காஸ்துதி.

நமஸ்தே சரண்யே சிவே ஸானுகம்பே
நமஸ்தே ஜகத்வ்யாபிகே விச்வரூபே
நமஸ்தே ஜகத்வந்த்ய பாதாரவிந்தே
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே

37. மஹாதேவி துர்காஸ்துதி.

சரணமஸி ஸுராணாம் ஸித்திவித்யா தராணாம்
முனிமனுஜப சூனாம் தஸ்யுபிஸ் த்ராஸிதானாம்
நிருபதி க்ருஹகதாநாம் வியாதிபிர் பீடிதானாம்
த்வமஸி சரணம் ஏகா தேவி துர்கே ப்ரஸீத.

52. காமாக்ஷீ ஸ்துதி பஞ்சகம்

தரணிமயீம் தரணிமயீம் பவநமயீம் ககநதஹநமாஹத்ருமயீம்|
அம்புமயீமிந்துமயீமம்பாமநுகம்பமாதிமாமீக்ஷே|| 1

பூமியின் உருவமாயும், சூரியனின் உருவமாயும், வாயுவின் உருவமாயும், ஆகாசம் அக்கினி யாகம் செய்தவர்கள் இவர்களின் உருவமாயும், ஜலத்தின் உருவமாயும், சந்திரன் உருவமாயும் இருக்கிறவளும், கம்பாநதிக் கரையில் வசிப்பவளும், உலகத்திற்கு முதல் தாயுமான காமாக்ஷியைக் கண்டேன்.

தாபிஞ்சஸ்தபகத்விஷே தநுப்ருதாம் தாரித்யமுத்ராத்விஷே
ஸம்ஸாராக்யதமோபுஷே புராரிபோ: வாமாங்கஸீமாஜுஷே|
கம்பாதீரமுபேயுஷே கவயதாம் ஜிஹ்வாகுடீம்
ஜக்முஷே!விச்வத்ராணபுஷே நமோஸ்து ஸததம்
தஸ்மை பரம் ஜ்யோதிஷே|| 2

தமாலப் பூங்கொத்தின் காந்தியை உடையவளும், பக்தர்களுடைய தாரித்திரியத்தைப் போக்குகிறவளும், ஜனனமரணமென்ற இருட்டைப் போக்குகிறவளும், புராரியான பரமசிவனுடைய இடது பக்கத்தில் இருப்பவளும், கம்பா நதிக்கரையில் இருப்பவளும், கவிகளுடைய நாக்கில் வசிப்பவளும், உலகத்தை ரக்ஷிப்பவளும், பரஞ்ஜ்யோதிஸ்ஸூமான காமாக்ஷியே! தங்களுக்கு நமஸ்காரம்.

ராகாசந்த்ரஸமாநகாந்திவதநா நாகாதிராஜஸ்துதா
மூகாநாமபி குர்வதீ ஸூரதுநீநீகாசவாக்வைபவம்|
ஸ்ரீகாஞ்சீநகரீவிஹாரரஸிகா சோகாபஹந்த்ரீ ஸதாம்
ஏகா புண்யபரம்பரா பசுபதேராகாரிணீ ராஜதே|| 3

பௌர்ணிமா சந்திரனின் காந்திக்கு ஸமானமான காந்தியோடு கூடிய முகத்தை உடையவளும், இந்திரனால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவளும், ஊமைகளுக்குங்கூடக் கங்காப்ரவாஹம்போல் வாக்கை அளிப்பவளும், ஸ்ரீகாஞ்சீ நகரத்தில் விளையாடுவதில் ருசிஉள்ளவளும், பக்தர்களுடைய சோகத்தைப் போக்குகிறவளும், ஸர்வோத்தமையும், உருவத்துடன் கூடிய ஸ்ரீபரமசிவனின் புண்ணிய பரம்பரையுமான ஸ்ரீகாமாக்ஷி விளங்குகிறாள்.

சந்த்ராபீடாம் சதுரவதநாம் சஞ்சலாபாங்கலீலாம்

குந்தஸ்மேராம் குசபரநதாம் குந்தலோத்தூதப்ருங்காம்|

மாராராதே: மதநசிகிநம் மாம்ஸலம் தீபயந்தீம்

காமாக்ஷீம் தாம் கவிகுலகிராம் கல்பவல்லீமுபாஸே|| 4

சந்திரனைச் சிரசில் ஆபரணமாகத் தரித்தவளும், அழகிய முகத்தை உடையவளும், சஞ்சலமான கடாக்ஷலீலையை உடையவளும், குந்த புஷ்பம்போல் அழகிய மந்தஹாஸத்தை உடையவளும், ஸ்தனபாரத்தினால் வணங்கிய் சரீரத்தை உடையவளும், முன்நெற்றிமயிரினால் விரட்டப்பட்ட வண்டுகளை உடையவளும், மன்மதனை நிக்ரஹித்த பரமசிவனுக்குக் காமாக்கினியை விருத்தி செய்கிறவளும், கவிகளின் கூட்டத்தின் வாக்குக்குக் கல்பவல்லியுமான அப்படிப்பட்ட காமாக்ஷியை உபாஸிக்கிறேன்.

ச்ரியம் வித்யாம் தத்யாஜ்ஜநநி நமதாம் கீர்திமமிதாம்

ஸுபுத்ரம் ப்ராதத்தே தவ ஜடிதி காமாக்ஷி கருணா|

த்ரிலோக்யாமாதிக்யம் த்ரிபுரபரிபந்திப்ரணயிநி

ப்ரணாமஸ்த்வத்பாதே சமிததுரிதே கிம் ந குருதே || 5

ஹே காமாக்ஷி! நமஸ்கரிக்கிறவர்களுக்கு உனது கருணையானது தனம், வித்தியை, அளவற்ற கீர்த்தி, நல்ல புத்திரன், மூவுலகிலும் மேன்மையாக இருக்கும் தன்மை இவற்றைச் சீக்கிரமாகவே கொடுக்கிறது. த்ரிபுரஸம் ஹாரம் செய்த பரமேச்வரரின் ப்ரிய பத்தினியே! பக்தர்களின் பாவத்தைப் போக்குகிற தங்கள் சரணத்தில் செய்த நமஸ்காரம் எதைத்தான் கொடுக்காது?

53. மீனாக்ஷீ பஞ்சரத்னம்

ஜகதம்ப கதம்பமூலவாஸே - கமலாமோதமுகேந்துமந்தஹாஸே|
மதமந்திரசாருத்ருக்விலாஸே - மயி மீநாக்ஷி க்ருபாம் விதேஹி தாஸே|| 1

உலகத்துக்குத் தாயும், கடப்ப மரத்தடியில் வஸிப்பவளும், தாமரைபோல் வாஸனையுள்ள, சந்திரன் போன்ற முகத்தில் புன்சிரிப்புள்ளவளும், மதத்துடன் கூடிய அழகிய கண்ணின் பார்வையை உடையவளுமான மீனாக்ஷி! தாஸனான என்னிடத்தில் கருணையைச் செய்.

உத்யத்பாநுஸஹஸ்த்ரகோடிஸத்தசாம் கேயூரஹாரோஜ்ஜவலாம்
பிம்போஷ்டீம் ஸ்மிததந்தபங்க்திருசிராம் பீதாம்பராலங் க்ருதாம்
விஷ்ணுப்ரஹ்மஸுரேந்த்ரஸேவிதபதாம் தத்தவஸ்வரூபாம் சிவாம்
மீநாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்|| 2

உதயமாகிற ஆயிரம் கோடி சூர்யனுக்கு ஒப்பானவளும், கேயூரம் ஹாரம் இவற்றால் பிரகாசிக்கிறவளும், கோவைப்பழம் போன்ற உதட்டையுடையவளும், புன்சிரிப்புடன் கூடிய பல்வரிசையின் காந்தியையுடையவளும், பீதாம்பரத்தினால் அலங்கரிக்கப்பட்டவளும், விஷ்ணு பிரம்மா இந்திரன், இவர்களால் ஸேவிக்கப்பட்ட பாதத்தையுடையவளும், தத்துவஸ்வரூபியும், மங்களம் தருபவளும், கருணைக் கடலுமான ஸ்ரீமீனாக்ஷியை எப்பொழுதும் நான் நமஸ்கரிக்கிறேன்.

முக்தாஹாரலஸத்கிரீடருசிராம் பூர்ணேந்துவக்த்ரப்ரபாம்
சிஞ்ஜந்நூபுரகிங்கிணீமணிதராம் பத்மப்ரபாபாஸுராம்|
ஸர்வாபீஷ்டபலப்ரதாம் கிரிஸுதாம் வாணீரமாஸேவிதாம்
மீநாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்|| 3

முத்தாஹாரத்தினால் பிரகாசிக்கிற கிரீடத்தினால் அழகுள்ளவளும், பூர்ண சந்திரன் போன்ற முக காந்தியை புடையவளும், சப்தத்துடன் கூடிய நூபுரத்திலுள்ள சின்ன மணிகளைத் தரித்தவளும்,

செந்தாமரைப் புஷ்பத்தின் காந்தியினால் பிரகாசிக்கிறவளும், சர்வாபீஷ்ட பலத்தைக் கொடுப்பவளும், பர்வதராஜ குமாரியும், ஸரஸ்வதி லக்ஷ்மி இவர்களால் ஸேவிக்கப்பெற்றவளும், கருணைக்கடலுமான ஸ்ரீமீனாக்ஷியை நான் எப்பொழுதும் ஸேவிக்கிறேன்.

ஸ்ரீவித்யாம் சிவவாமபாகநிலயாம் ஹ்ரீம்காரமந்த்ரோஜ்ஜ்வலாம்
ஸ்ரீசக்ராங்கிதபிந்துமத்யவஸதிம் ஸ்ரீமத்ஸபாநாயகீம்|
ஸ்ரீமத்ஷபமுகவிக்நராஜஜநநீம் ஸ்ரீமஜ்ஜகந்மோஹிநீம்
மீநாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்யவாராம்நிதிம்|| 4

ஸ்ரீவித்யாரூபிணியும், பரமசிவன் இடது பாகத்தில் வசிப்பவளும், ஹ்ரீங்கார மந்த்ரத்தில் பிரகாசிப்பவளும், ஸ்ரீசக்ரத்தின் பிந்துவின் நடுவில் வசிப்பவளும், ஸ்ரீசித்சபை நாயிகையும், ஸ்ரீமானான ஆறுமுகம் கணபதி இவர்களுக்குத் தாயும், ஜகத்தை மோஹிக்கச் செய்கிறவளும், கருணைக்கடலுமான ஸ்ரீமீனாக்ஷியை நான் எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீமத்ஸுந்தரநாயிகாம் பயஹராம் ஜ்ஞாநப்ரதாம் நிர்மலாம்
ஸ்ரீயாமாபாம் கமலாஸநார்சிதபதாம் நாராயணஸ்யாநுஜாம்|
வீணாவேணும்ருதங்கவாத்யரஸிகாம் நாநாவிதாடம்பிகாம்
மீநாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்|| 5

ஸ்ரீ சுந்தரேசக்வரரின் நாயகியும், பயத்தைப் போக்குகிறவளும், ஞானத்தை யளிப்பவளும், சுத்தமானவளும், கறுத்த நிறமுள்ளவளும், பிரம்மாவினால் பூசிக்கப்பட்ட பாதங்களுடையவளும், நாராயணனுக்குச் சகோதரியும், வீணை வேணு ம்ருதங்க வாத்தியங்களில் ரஸமுள்ளவளும், நானா விதமான ஆடம்பரத்துடன் கூடினவளும், கருணைக் கடலுமான மீனாக்ஷியை நான் எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன்.

54. பார்வதீ ஸ்துதிபஞ்சகம்

வாணீம் ஜித சுக வாணீம் அலிகுலவேணீம் பவாம்புதி த்ரோணீம்|
வீணாசுகசிசுபாணிம் நதகீர்வாணீம் நமாமி சர்வாணீம்|| 1

வேதரூபியும், சொல்லினால் கிளியின் சொல்லை ஜயித்தவளும், கருவண்டுக் கூட்டம் போன்ற பின்னலையுடையவளும், ஸம்ஸாரஸமுத்திரத்தைக் கடப்பதற்குத் தோணி போன்றவளும், வீணையையும் கிளிக்குஞ்சையும் கையிலுடையவளும், தேவர்களால் நமஸ்கரிக்கப்பெற்றவளுமான பரமசிவனுடைய பத்தினியை நமஸ்கரிக்கிறேன்.

சரணாகத ஜந பரணாம் கருணா வருணா லயாம் நவாவரணாம்|
மணிமய திவ்யாபரணாம் சரணாம்போஜாத ஸேவகோத் தரணாம்|| 2

சரணமடைந்த ஜனங்களை ரக்ஷிப்பவளும், கருணைக்கடலாயிருப்பவளும், ஒன்பது பிராகாரங்களுக்கு நடுவில் இருப்பவளும், ரத்தினங்களால் இழைக்கப்பட்ட திவ்யமான ஆபரணங்களுள்ளவளும், பாதகமலங்களை ஸேவிக்கின்றவர்களை ஆபத்தினின்றும் விடுவிப்பவளுமான தங்களைத் தவிர்த்து வேறு தேவதையை நான் அறியவில்லை.

பவநமயி பாவகமயி க்ஷோணீமயி ககநமயி க்ருபீடமயி|
ரவிமயி சசிமயி திங் மயி ஸமயமயி ப்ராணமயி சிவே பாஹி||3

காற்று, அக்கினி, பூமி, ஆகாசம், ஜலம், சூரியன், சந்திரன், திக்குகள், காலம், பிராணன் என்ற இந்த எல்லா உருவமும் கொண்ட ஹே சிவே! (ஒ மங்களகரி!) என்னைக் காக்கவேண்டும்.

முகே தே தாம்பூலம் நயநயுகலே கஜ்ஜலகலா
லலாடே காச்மீரம்விலஸதி கலே மௌக்திகலதா|
ஸ்புரத்காஞ்சீ சாடீ ப்ருதுகடிதடே ஹாடகமயீ
பஜாமி த்வாம் கௌரீம் நகபதிகிசோரீமவிரதம்|| 4

உன்னுடைய முகத்தில் தாம்பூலமும், இரண்டு கண்களிலும் மையும், நெற்றியில் குங்குமமும், கழுத்தில் முத்துமாலையும், பெருத்த இடுப்பில் பிரகாசிக்கின்ற ஒட்டியாணத்துடன் கூடின பீதாம்பரமும் விளங்குகின்றன. இப்படிப்பட்ட பர்வதராஜ குமாரியான கௌரியான தங்களை எப்பொழுதும் பஜிக்கிறேன்.

ச்ருதீநாம் மூர்தாநோ தததி தவ யௌ சேகரதயா

மமாப்யேதௌ மாத: சிரஸி தயயா தேஹி சரணௌ|

யயோ: பாத்யம் பாத: பசுபதிஜடாஜூடதடிநீ

யயோர்லாக்ஷாலக்ஷ்மீரருணஹரிசூடாமணிருசி:|| 5

ஹே தேவி! ச்ருதிகளுடைய சிரஸ் போன்ற உபநிஷத்துக்கள் எந்த உன்னுடைய பாதங்களைச் சிரோபூஷணமாக அணிந்திருக்கின்றனவோ அவற்றைத் தயவுசெய்து என்னுடைய தலையில் வை. அந்தப் பாதங்களுக்குப் பரமேசுவருடைய ஜடையில் சஞ்சரிக்கும் கங்கை கால் அலம்பும் ஜலம் ஆகிறாள்; இந்திரனுடைய தலையில் இருக்கிற சிவந்த ரத்தினத்தினுடைய காந்தி பாதங்களுக்குச் செம்பஞ்சுக்குழம்பு ஆகிறது.

55. ஸரஸ்வதீ ஸ்துதி பஞ்சகம்

ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி|
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவது மே ஸதா|| 1

ஸரஸ்வதி தேவியே, வரத்தைக் கொடுப்பவளே, விரும்பிய ரூபத்தை அடைகிறவளே, கல்வியின் ஆரம்பத்தைச் செய்யப்போகிறேன். எனக்கு எப்பொழுதும் சித்தி ஏற்படட்டும்.

யா குந்தேந்து துஷார ஹார தவலா யா சுப்ர வஸ்த்ரா வ்ருதா
யா வீணா வரதண்ட மண்டித கரா யா ச்வேதபத்மாஸநா|
யா ப்ரஹ்மாச்யுத சங்கர ப்ரப்ருதிபி: தேவை: ஸதா பூஜிதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ நி:சேஷ ஜாட்யா பஹா|| 2

மதியையும் பனியையும் நிகர்த்த மல்லிகை மாலையணிந்து, வெள்ளைக்கலையுடுத்தி, வாத்தியங்களில் சிறந்த வீணையைக் கையிலேந்தி, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பவளும், பிரமன் விஷ்ணு ருத்திரன் முதலிய தேவர் அனைவராலும் என்றென்றும் வணங்கப்படுகிறவளுமான என் தாய் எனது அறியாமையையெல்லாம் அகற்றி என்னைக் காப்பாளாக.

மாணிக்யவீணாமுபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்ஜுல வாக்விலாஸாம்|
மாஹேந்த்ர நீல த்யுதிகோமலாங்கீம்
மாதங்ககந்யாம் மநஸா ஸ்மராமி|| 3

மாணிக்கங்களால் இழைக்கப்பட்ட வீணையை மீட்டுகிறவளும், யௌவனத்தால் மிக ஸௌந்தர்யமானவளும், இனிமையான வாக்சாதுர்யத்தை உடையவளும், இந்திரநீல மணிகளுடைய காந்திபோன்ற காந்தியினாலே ஸௌந்தர்யமான சரீரத்தை உடையவளும், மதங்கமுனிவரின் புத்திரியுமான சியாமளா தேவியை மனத்தினால் நினைக்கிறேன்.

சதுர்புஜே சந்த்ரகலாவதம்ஸே

குசோந்நதே கும்கும ராக சோணே|

புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்ப பாண

ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத:|| 4

நான்கு கைகளையுடையவளே! சந்திரனைச் சிரோபூஷணமாக உடையவளே! பெருத்த இரு ஸ்தனங்களுடையவளே! குங்குமத்தின் காந்திபோன்ற சிவந்த வர்ணத்தினளே! கொஞ்சம் சிவந்தும் கறுத்தும் உள்ளகரும்பு கயிறு அங்குசம் புஷ்பபாணம் இவற்றைக் கையினில் உடையவளே! உலகத்துக்கு ஒரே தாயே! உனக்கு நமஸ்காரம்.

மாதா மரகத ச்யாமா மாதங்கீ மத சாலிநீ|

குர்யாத் கடாக்ஷம் கல்யாணீ கதம்பவந வாஸிநீ|| 5

மரகத மணிகளைப் போல் அழகியகறுத்த மேனியையுடையவளும் மத்யபானத்தைவிரும்புகிறவளும், கதம்பவனத்தில் வாஸம் செய்கிறவளும், மங்களத்தை விளைவிக்கிறவளும், லோகமாதாவுமாகிய சியாமளாதேவி என்னிடத்தில் கடாக்ஷத்தை வைக்கட்டும்.

56. துர்கா ஸ்துதிபஞ்சகம்

த்வம் ப்ரஹ்மவித்யா வித்யாநாம் மஹாநித்ரா ச தேஹிநாம்|

ஸ்கந்தமாதர்பகவதி துர்கே காந்தாரவாஸிநி|| 1

ஸுப்ரஹ்மண்யருடைய தாயே! பூர்ண ஐசுவர்யாதி ஆறு குணங்களுடன் கூடியவளே! ஹே துர்க்கே காட்டில் வசிப்பவளே! நீ வித்யைகளுக்குள் ப்ரஹ்மவித்யை. நீ பிராணிகளுடைய மஹாநித்திரை.

ஸ்வாஹாகார: ஸ்வதா சைவ கலா காஷ்டா ஸரஸ்வதீ|

ஸாவித்ரீ வேதமாதா ச ததா வேதாந்த உச்யதே|| 2

நீ தேவர்களின் ஹவிர்பாக மந்திரமாகவும், பித்ருக்களின் அன்னமான ஸ்வதையாகவும், கலையாகவும், திக்குகளாகவும், ஸரஸ்வதியாகவும், ஸாவித்ரியாகவும், வேதமாதாவாகவும் (காயத்திரியாகவும்), வேதாந்தமாகவும் சொல்லப்படுகிறாய்.

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே

நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே|

நமஸ்தே ஜகத்வந்த்யபாதாரவிந்தே

நமஸ்தே ஜகத்தாரிணி த்ராஹி துர்கே|| 3

சரண்யையும் மங்களகரியும் தயவுடன் கூடினவளுமான ஹே துர்க்கே! உனக்கு நமஸ்காரம். ஜகத்தில் வியாபித்தவளும் விச்வரூபியுமான உனக்கு நமஸ்காரம். உலகத்தாரால் நமஸ்கரிக்கத் தகுந்த பாதார விந்தங்களையுடையவளே, நமஸ்காரம். ஆபத்திலிருந்து உலகத்தைத் தரணம் செய்து வைப்பவளான தங்களுக்கு நமஸ்காரம். ஸே துர்க்கே, ரக்ஷிக்க வேண்டும்.

சரணமஸி ஸுராணாம் ஸித்தவித்யாதராணாம்

முநிமநுஜ பசூநாம் தஸ்யுபிஸ் த்ராஸிதாநாம்|

ந்ருபதி க்ருஹ கதாநாம் வ்யாதிபி: பீடிதாநாம்

த்வமஸி சரண மேகா தேவி துர்கே ப்ரஸீத|| 4

ஹே துர்க்கே! தேவர்களுக்கும் சித்த வித்தியாதரர்களுக்கும், மஹறிஷிகள் மனுஷ்யர்கள் பசுக்கள் இவர்களுக்கும், திருடர்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கும், அரசருடைய கிருஹத்தை யடைந்தவர்களுக்கும், வியாதியினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் நீங்கள் ஒருவர்தாம் ரக்ஷையாக இருக்கிறீர்கள். ஹே தேவீ, ப்ரசாதம் செய்யவேண்டும்.

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமசேஷஜந்தோ:

ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிமதீவ சுபாம் ததாஸி|

தாரித்ரியதுக்க பயஹாரிணி கா த்வதந்யா

ஸர்வோபகார கரணாய ஸதார்த்ர சித்தா|| 5

ஹே துர்க்காதேவியே, பக்தர்கள் உன்னை நினைத்தால் எல்லாப் பிராணிகளுடைய பயத்தையும் போக்கடிக்கிறாய். எந்த விதத்திலும் குறைவு இல்லாமல் இவ்வாழ்க்கையில் இருப்பவர்களால் நினைக்கப்பட்டால் மிகவும் நன்மை பயக்கக்கூடிய புத்தியைக் கொடுக்கிறாய். எல்லாருக்கும் எல்லா உபகாரங்களையும் செய்யும்பொருட்டு எப்பொழுதும் மிகவும் ஈர நெஞ்சத்தையுடையவளாயும், பொருளில்லாமை, துக்கம், எல்லாவிதப் பயம் இவை எல்லாவற்றையும் ஒருங்கே போக்கடிக்கக் கூடியவளாயும் இருக்கிறாய். உன்னைத் தவிர இத்தகையவர் வேறுயார் இருக்கிறார்கள்? ஒருவருமில்லை.

57. மஹாலக்ஷ்மீ ஸ்துதிபஞ்சகம்

ஸித்திபுத்திப்ரதே தேவி புக்திமுக்தி ப்ரதாயிநி|
மந்த்ரமூர்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்து தே|| 1

ஸித்தியும் புத்தியும் கொடுப்பவளும், தேவியும், போகமும் மோக்ஷமும் கொடுப்பவளும், மந்த்ரமூர்த்தியும், எப்பொழுதும் பிரகாசிக்கிறவளுமான மஹாலக்ஷ்மியே, உமக்கு நமஸ்காரம்.

ஆத்யந்தரஹிதே தேவி ஆத்யசக்தி மஹேச்வரி|
யோகஜே யோகஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோஸ்து தே|| 2

ஆதியந்தமற்றவளும், தேவியும், முதல் சக்தியும், மஹேச்வரியும், யோகத்தினால் உண்டானவளும், யோகத்துப் பயனுள்ள மஹாலக்ஷ்மி உமக்கு நமஸ்காரம்.

ஸ்தூலஸூக்ஷ்மமஹாரௌத்ரே மஹாசக்தி மஹோதரே|
மஹாபாபஹரே தேவிமஹாலக்ஷ்மி நமோஸ்து தே|| 3

ஸ்தூலமாயும், ஸூக்ஷ்மமாயும், மிகப் பயங்கரமாயுமுள்ளவளும், மஹாசக்தியும், விசாலமான வயிற்றையுடையவளும், மஹாபாபங்களைப் போக்குகிறவளும், தேவியுமான மஹாரக்ஷ்மியே, உமக்கு நமஸ்காரம்.

பத்மாஸநஸ்திதே தேவி பரப்ரஹ்மஸ்வரூபிணி|
பரமேசி ஜகந்மாதர்மஹாலக்ஷ்மி நமோஸ்துதே|| 4

பத்மாஸனத்தில் அமர்ந்தவளும், தேவியும், பரப்ரஹ்மஸ்வரூபிணியும், பரமேச்வரியும், உலகத்துக்குத் தாயுமான மஹாலக்ஷ்மி! உமக்கு நமஸ்காரம்.

தத்யாத் தயாநுபவநோ த்ரவிணாம்பு தாராம்
அஸ்மிந் ந கிஞ்சனவிஹங்க சிசௌ விஷண்ணே|
துஷ்கர்ம கர்ம மபநீய சிராய தூரம்
நாராயண ப்ரணயிநீ நயநாம்பு வாஹ:|| 5

கருணையை அநுகூலமான காற்றாகக் கொண்ட மஹாலக்ஷ்மியினுடைய கடாக்ஷமாகிய மேகமானது இந்தக் கஷ்டப்படுகிற தரித்திரனாகிய சிறு சாதக பக்ஷியினுடைய விஷயத்தில் பாவமாகிற அத்யுஷ்ண தாபத்தை வெகு தூரத்துக்கப்பால் போக்கடித்துவிட்டுப் பணமாகிற ஜலப்ரவாஹத்தைக் கொடுக்கட்டும்.

58. ஸ்ரீ அபீதகுசாம்பாள் ஸ்தவம்

(ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர் அருளியது)

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அபீதகுசாம்பாஸமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரரை ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர், கார்த்திகை உத்ஸவ மையத்தில் தரிசிக்கச் சென்றபோது, ஸ்ரீமான் தீக்ஷிதருக்கு, குளிர்ஜுரம் வந்து, அதனால் வருந்திய அம்மகான், அம்பாளைக் குறித்து ஸ்தோத்ரம் செய்ய, ஜுரம் உடன் நீங்கிறது.

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் ஆக்ஞைப்படி, ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் இந்த ஸ்தோத்திர ரத்தினத்தைக் கல்லில் செதுக்கி, அடைபீபலம் ஸ்ரீபார்வத்யம்பாள் சந்நதியில் வைக்கப்பட்டிருக்கிறது. இதைத்தினமும் பாராயணம் செய்து வந்தால், எவ்வித நோயும் அணுகாது என்பது நிச்சயம்.

1. ஆனந்த ஸிந்து லஹரீ மம்ருதாம்சுமௌலே:
ஆஸேவிநாமம்ருதநிர்மிதவர்த்திமக்ஷ்ணோ:
ஆநந்த வல்லி விததே ரம்ருதார்த்ர குச்சம்
அம்ப ஸ்மராம் யஹ மபீதகுசே வபுஸ் தே.

உண்ணாமுலையாளாக வீற்றிருக்கும் அன்னையே! ஸ்தன்ய பானமே செய்யாத உலக அன்னையே! உண்திருமேனி அமுதத்தால் நனைந்திருக்கிறது, அத்தகையதிவ்யத்திருமேனிய நினைக்கின்றேன். பார்ப்போர் சேவிப்போர் கண்ணுக்கு நீ மிகுந்த குளுமையை அளிக்கிறாய் சந்திரமௌளியின் பேரானந்தக் கடலின் அலைகளில் நீந்துகிறவர்களுக்கு அமுதத்தை அளிக்கிறாய். அத்தகைய தாயே உன்னை ஸ்மரிக்கிறேன்.

2. நிர்நித்ர கோகநத கோமல காந்த மம்ப!
நித்யம் ஸுதா நிகரவர்ஷி பதம் த்வதீயம்
மூர்ச்சாகர ஜ்வரருஜா மம தாபிதஸ்ய
மூர்த்நி க்ஷணம் ஸக்ரு தபீதகுசே! நிதேஹி.

கடுமையான தாபஜ்வரத்திலும் மூர்ச்சை கொடுக்கும்நோயிலும் அவதிப்பட்டு, கொதிப்படைந்த என் தலையில் நின் திருவடி இருந்துகொண்டே இருக்கட்டும். அமுத வெள்ளம் அல்லவா உன் திருவடிகளில் இருக்கிறது? மலர்ந்த செந்தாமரை போல் மென்மையும் அழகும் பொருந்திய திருவடிகளை ஒரு கணப்பொழுதாவது எண்சன்னிக்கு அணியாக வைத்தருள வேண்டுகிறேன்.

3. சீதாம்சு கோடி ஸுஷமா சிசிரை: கடாக்ஷை:
அவ்யாஜ பூத கருணாரஸ பூர பூர்ணை:.
கர்ப்பூர தூளிமிவ திக்ஷு ஸமா கிரத்பி:
அம்ப! க்ஷணம் ஸ்நபய மாம் அருணாத்ரி மாந்யே!.

அருணாமலையாள் போற்றும் என் தாயே. கோடி சந்திரனின் குளுமைபோல் குளிர்சியுடையதும், திசைகள்தோறும் இறைபடும் கற்பூர தூளி போன்றதும் எவ்வஹை பலனையும் எதிர்பாராது கருணை மழை பொழியும் உனது கடைக்கண்பார்வைகளாலே என்னை ஒருகணம் நனைப்பாயாக. (குளிர்விப்பாயாக)

4. ஆவிர்ப்பவ க்ஷண மபீதகுசே புரஸ்தாத்
அம்ப! ஜ்வரேண மஹதா மம தாபிதஸ்ய
யேந த்வதங்க்ரி ருசி ஜால ஸுதா ப்ரவாஹே
மக்நஸ் ததைவ தநு தாப மமும் த்யஜேயம்.

தாயே, முதலில் நீ என் முன் க்ஷண நேரம் தோன்றுவாயாக. மிகுந்த ஜ்வரத்தினால் கொதிப்படைந்து இருக்கிறேன், பாத கமலங்களி லிருந்து பாய்கிற அமுத வெள்ளத்தில் மூழ்கி இந்தக் கொடிய தாபத்தைப் போக்கிக் கொள்கிறேன் அம்மா!.

5. நாநாவிதைர் நளினஜாத லிபி ப்ரக்லுப்தை:
ஆநீத மூர்ச்ச மதிகம் க்ஷுபிதைர் ஜ்வராத்யை:.
ஆச்வாஸய க்ஷண மபீதகுசே! கராக்ர
க்ரீடா கநத் கநயீ ஹல்லக ஸௌரபேண.

தாயே, பலவகை ஜுரத்தால் உடல் கொதிப்படைந்த நிலையில் கதிகலங்கி, மூர்ச்சாக்ராந்தனாய், செய்வதறியாமல் இருக்கிறேன். உன் கைவிரல்களில் விளையாட்டாகத் தாங்கியிருக்கும் பொற்றாமரை மலரின் மணத்தை என்மீது வீசி எனக்கு அமைதியை அறிவிப்பாயாக.

6. கண்டேவிஷம் விஷமுசோ புஜகா: கபர்த்தே
பார்ச்வே ச பூதபதய: ப்ரமதாஸ்ச்ச பீமா:
சோணா சலேசமுபஸ்ருத்ய பஜேத கோ வா
ந ஸ்யாத் தவாம்ப ஸ்விதே யதி ஸந்நிதாநம்.

கழுகத்தில் விஷம், சடைமுடிவில் விஷத்தைக் கக்கும் ஸர்ப்பங்கள், இருபுறமும் பூதகணங்கள், பயங்கரமான ப்ரமதகணங்கள் இவை யாவும் சோணமலையானிம் இருப்பதனால் யாராவது இத்தகையவனை அணிகுவார்களா? மாட்டார்கள். உன் ஸாந்நித்யம் சோணாசலேசரிடம்

இருப்பதனால் தான் அனைவரும் வந்து ஸேவிக்க முடிகிறது. தூய்மை இருக்கும் இடத்தில் பேதைமை இல்லை அல்லவா?

7. சக்திர் ஜகத்ஜனன பாலந பஞ்சநேஷு
போகேஷு திவ்யமஹிஷீ தருணேந்துமௌளே:.
ஸித்திக்கர ப்ரணயிநீ தவ ஸந்நிதாநம்
யந் நாஸி தஸ்ய தத்அபீதகுசே ந ஜாநே.

உலக ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்களில் நீ சக்தியாக விளங்குகிறாய். இளமதியைச் சிரஸ்ஸில் தரித்திருக்கிற சந்திரமௌளீஸ்வராருடைய இன்ப அனுபவங்களுக்குத் திவ்ய பட்ட மஹிஷியாக விளங்குகிறாய். ஆகவே உனது ஸந்நிதானம் கை கண்டபலனைக் கொடுக்கிறது. அப்படி இல்லையானால் யார் அறிய முடியும் அம்மா?

8. த்வம் ஸாக்ஷிணீ ப்ரளய பைரவ தாண்டவாநாம்
த்வம் சேஷிணீ ஸஹரி தாத்ரு சராசராணாம்
த்வம் மோசிநீ ஸகல ஸம்ஸ்ருதி ஜாலகாநாம்
த்வாம் ப்ரஹ்ம ஸம்விதம் அபீதகுசே! நமாமி.

உலக அன்னையான அபீத குசாம்பிகே, உன்னை வணங்குகிறேன். ப்ரளய கால பைரவ நடனங்களுக்கு நீ சாக்ஷியாக இருக்கிறாய். ப்ரம்மா, விஷ்ணு, சராசங்கள் அனைத்துக்கும் நீ தலைவி, பலவகை இன்னல்களிலிருந்து எம்மை விடுவிக்கிறாய். ஆகவே நீயே ப்ரம்மத்தை அறிந்த ப்ரம்ம ஸம்வித்தாக விளங்குகிறாய். அத்தகைய உன்னை வணங்குகிறேன்.

59. காமாக்ஷி துக்கநிவாரணி துதி

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே.
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே.
கங்கண பாணியன் கனிமுகங் கொண்டநல்
கற்பக காமினியே.
ஜெயஜெயசங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.



கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்.
தானுறுதவஒளி தாரொளிமதியொளி
தாங்கியே வீசிடுவாள்.
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்.
ஜெயஜெயசங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.

சங்கரிசௌந்தரிசதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே.
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே.
எங்குலம் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே.
ஜெயஜெயசங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.

தன தன தந்தன தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்,

கன கன கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்.
பண பண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்.
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.

பஞ்சமி பைரவி பர்வதபுத்திரி
பஞ்ச நல் பாணியளே,
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே.
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தி யெனும் மாயே,
ஜெயஜெயசங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.

எண்ணிய படிநீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே,
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்.
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே,
ஜெயஜெயசங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.

இடர் தரும் தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்லிடுவாய்,
சுடர் தரும் அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்.

படர் தரும் இருளில் பரிதியாய் வந்து
பலவினை ஓட்டிடுவாய்,
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்கநிவாரணி காமாக்ஷி.

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி!
ஜெயஜெய ஸ்ரீ தேவி.
ஜெய ஜெய துர்க்கே! ஸ்ரீ பரமேஸ்வரி!
ஜெய ஜெய ஸ்ரீவாணீ.
ஜெய ஜெய ஜெயந்தி! மங்களகாளி!
ஜெய ஜெய ஸ்ரீ சண்டீ,
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி!
துக்கநிவாரணி! காமாக்ஷி!.

காமாக்ஷி துதி முற்றும்
சுபம்.

60. கருமாரி கற்பூரநாயகி துதி

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா!
பூவிருந்தவல்லி தெய்வயானையம்மா!
விற்கோல வேதவல்லி! விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை! மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே!
சுடராக வாழவைப்பாய் எங்களை நீயே!.

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி!
பரமெரித்தோன் புரமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் நாகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே! ஸர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீ யாதரி!.

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ? அம்மா!
சின்னவனின் குரல்கேட்டு உன்முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு!

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்!
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்!
பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டும்!
பக்தியோடு கை யுன் னையே கூடவேண்டும்!

எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடைய தாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா!

நெற்றியிலுன் குங்குமமே நிறைய வேண்டும்,
நெஞ்சினிலுன் உன் திருநாமம் வழிய வேண்டும்.
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்,
கவிதையிலே உன் நாமம் வாழவேண்டும்.
சுற்றமெல்லாம் நீடுழி வாழவேண்டும்,
ஜோதியிலே நீ யிருந்து ஆளவேண்டும்.
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா?
மடிமீதுன்பிள்ளை என்னைத் தள்ளலாமா!

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ?
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ?
கன்றுக்குப் பசுவின்றி சொந்தமுண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ?

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்,
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்.
வம்புக்கே போகாமலிருக்க வேண்டும்,
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்.
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்,
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்.
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்,
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்.

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை,
　　　　கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை.
நம்பிடவோ மெய்தன்னில் சக்தி இல்லை,
　　　　நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை.

செம்பவள வாயழகி உன்னெழிலோ,
　　　　சின்ன இருகண்களுக்குள் அடங்கவில்லை.
அம்பளவு விழியாளே! உன்னை என்றும்,
　　　　அடிபணியும் ஆசைக் கோர் அளவுமில்லை.

காற்றாகி கனவாகிக் கடலாகினாய்,
　　　　கருவாகி உயிராகி உடலாகினாய்.
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்,
　　　　நிலமாகி பயிராகி உணவாகினாய்.
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்,
　　　　தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்.
போற்றாத நாளில்லை தாயே உன்னை,
　　　　பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.

துதிமுற்றும்.

61. துர்கை ராகுகாலதுதி

தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே

வாழ்வு ஆனவள் துர்கா வாக்குமானவள்.
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்.
தாழ்வு அற்றவள் துர்கா தாயுமானவள்
தாபம் நீக்கியே எனைத் தாங்கும் துர்கையே. 1
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

உலகை ஈன்றவள் துர்கா உமையுமானவள்.
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்.
நிலவில் நின்றவள் துர்கா நித்யை ஆனவள்.
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்கையே. 2
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

செம்மையானவள் துர்கா செயமு மானவள்
அம்மையானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மையானவள் துர்கா இன்ப மானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்கையே 3
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

உயிருமானவள் துர்கா உடலுமானவள்.
உலகமானவள் எந்தன் உடமையானவள்.
பயிருமானவள் துர்கா படரும் கொம்பவள்.
பண்பு பொங்கிட என்னும் பழுத்த துர்கையே. 4
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

துன்பம் அற்றவள் துர்கா துரிய வாழ்பவள்
துறையும் ஆனவள் இன்பத் தோணியானவள்.
அன்பு உற்றவள் துர்கா அபய வீடவள்.
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்கையே. 5
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

குருவுமானவள் துர்கா குழந்தையானவள்.
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே.
திருவுமானவள் துர்கா த்ரிசூலி யானவள்.
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்கையே. 6
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

ராகு தேவனின் பெரும்பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்கையே 7
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே 8
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே.

துதி எட்டும் முற்றும்.

சுபம்

62. ஜெயதுர்கை துதி

பல்லவி

ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம்
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம்
கனக துர்காதேவி! சரணம் விஜய துர்கா தேவி சரணம்

சரணம்

துர்க்கை யம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்.
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால் போதும்.
கர்ம வினைகளும் போகும் ஸர்வமங்களம் கூடும்.
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம்
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம் 1

பொற்கரங்கள்பதினெட்டும்நம்மை சுற்றிவரும் பகைவிரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டு வெற்றிப் பாதையைக் காட்டும்
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம்
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம் 2

ஆயிரங் கரங்கள் உடையவளே ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய்போல் நம்மை காப்பவளே
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம்
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம் 3

சங்குசக்கரம் வில்லும்அம்பும் மின்னும் வாளும் வேலும் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் அவள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்.
திங்களை முடிமேல் சூடி நிற்பாள் மங்கள வாழ்வும் தந்திடுவாள்.
மங்கையர்கரசியும் அவளே அங்கையர்க்கண்ணியும் அவளே.
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம்
ஜெய ஜெய தேவி! ஜெய ஜெய தேவி! துர்காதேவி! சரணம் 4

துதிப்பாடல்முற்றும்.

63. பத்ரகாளி திருவருள்மாலை

1. திருமலியும் வாழ்வருளி அன்பரைக் காப்பதே
சித்தமாயுள்ள தெய்வம்
திப்பியமறை சிரத்தேறி விளை யாடு மிரு
திரு வடிகள் உடைய தெய்வம்
உறுமலியு மாற்றலால் நன்மக்கள் வாழ்வு பெற
ஊறு புரி தீய மக்கள்,
ஒடுங்கு வது வேண்டியே படைக்கலம் பல வேந்தும்
ஒப் பற்ற சமர சக்தி,
தரு மலியும் வாழ்வு பெறு மிந்திரனும் வானவரும்,
சரண் புகுந் தேத்து தெய்வம்.
சாது சன மென் றுமே தீது கண் டடையாத,
சக்தி தரு மிக்க தெய்வம்,
பருவ மழை போலவே அருள் பொழியும் விழிகொண்ட,
பரம கல்யாண தெய்வம்
பத்திரகாளிப் பெயரின் வைத்த மந்திரதெய்வம்
பரிவுட னெமக் கருள்கவே. 1

2. ஓங் கார வுரு வாகி யதனு ளுறை பொருளாகி
உலகெ லாம் ஆளும் இறைவி
உண் மையின் விளக் கத்தை மெய் யன்பர்
உண ரவே உரு வெடுத் தருளும் இறைவி,
ஆங் கார மானுக் கும் அப் பால் நிலைத் துள்ள,
அற் புதத் தெய்வம் நீயே,
ஆத லால் உலகு யிர்கள் எல்லாம் பணிந்து நின
தருள் வெள்ளம் ஆடு கின்ற
தீங்காய எண்ணமும் தீங்காய செய்கையும்
தீங் காய மொழியு மேந்தித்
திசை யெலாம் தம்மைப் பழிக்கவே பிறர் மனம்
தேம்பும் வணம் வாழும் மாக்கள்
பாங் காக நல் லறிவை யெய் தவே படை யேந்து
பல கரம் கொண்ட பெரியாய்,
பத்திர காளிப் பெயரின் வைத்த மந்திர தெய்வம்
பரிவுட னெமக் கருள் கவே.

3. கராள வுரு வை கொண்ட காளி யென நின்னன்பர்
கனி வினோ டோதுகின்றார்
கருணை யிற் பெரியை யென மஹிமையிற் பெரியை யெனக்
காத லோடு மோது கின்றார்
சராசர மனைத் துக்கும் உள்ளிருந் தருள் பொழிதல்
ஜகதி நின் செய லாகுமே
சாந்த வா னந்தர் புரி மந்திரத் திருவேள்வி
தன்னிலே வந்து நின்றாய்

பராபரை யெனச் சொல்க பரம பாவனை யென்ப
பாடாத பாட்டி னுள்ளாய்
பக்குவ மனத் திடையில் நிற்பதற் குரிமையுள
பழம் பெருந் தெய்வம் அலையோ,
பராசரை சிதானந்த பகவதி பகவதி பரமேட்டி
பார்த் தருள வேண்டு கின்றோம்
பத்திரகா ளிப்பெயரின் வைத்த மந்திரதெய்வம்
பரிவுட னெமக் கருள் கவே. 3

துதிப்பயன்

அறங்கள்பல பல்லாண்டு பல்கிவரும் அரசாய
அரும்பெரும் புதுக்கோட்டையில்
அறிவர் பெருமக்கள் பணி சதாசிவப் பிரம்ம மெனும்
ஆனந்த மூர்த்தி நிலையில்
அறங்கள் வரைப்புகழு புவனேசி ஆகியவள்
அகி லாண்ட நாய கிசிவை
அருளினால் ஆண்டு தொறும் நடை பெறும் வேள்வி களில்
ஆண்டு பரீ தாபி யினி லே
திறங்களே வளர்வு பெற அருள் பத்ர காளியின்
திரு வருள் லக்ஷ ஹோமம்
சிறப் புற நிகழ்த் துவது சித் தத்தில் ஏற்ற குரு
சேவை தெளி சாந்த முனிவர்
புறங் களே அக மோடு பூரிப்பை எய் தவே
பொலிவு பெற ஆற்றும் வேள்வி
புவி யெலாம் நன்மை பெற வாய்த்த தென வான வர்கள்,
புகழுவார் மகிழு வாரே.

(புதுக்கோட்டை அதிஷ்டானம்

64. வரம் வேண்டுதல்
பிரத்யங்கிரா காளியே சரணமம்மா
(கும்மிமெட்டு)

வரம்தருவாய் வரம்தருவாய் காளியம்மா
வணங்கி நின்றோர் துயர்களைவாய் காளியம்மா.
கரம்குவித்து வணங்குகின்றோம் காளியம்மா
களிப்புடனே முடித்தருள்வாய் காளியம்மா. 1

வேதமெல்லாம் புகழுகின்ற காளியம்மா
பாதகங்கள் போக்கிடுவாய் காளியம்மா.
ஆணவங்கள் நீங்கவேண்டும் காளியம்மா
பக்தர்களைக் காத்திடுவாய் காளியம்மா. 2

ஞானத்தின் மூலமான காளியம்மா
நம்பினோரை உயர்த்திடுவாய் காளியம்மா.
காலமெல்லாம் வணங்குகிறோம் காளியம்மா
கண்திறந்து அருள்புரிவாய் காளியம்மா. 3

உலகமெல்லாம் உன்னிடமே காளியம்மா
தலைமுறையாய் தொழுதுவந்தோம் காளியம்மா.
வளமாக வாழவேண்டும் காளியம்மா
அழகான கோயிலிலே காளியம்மா. 4

அறியாமை போக்கிடுவாய் காளியம்மா
குலம்தழைத்து வளரச்செய்வாய் காளியம்மா.
ஆயுட்காலம் நீட்டிடுவாய் காளியம்மா
அறநெறியில் வாழவைப்பாய் காளியம்மா. 5

தமிழ்தெரிந்த எங்களுக்கு காளியம்மா
நெறிமுறைகள் தெரியவைப்பாய் காளியம்மா.
நோயற்ற வாழ்வு வேண்டும் காளியம்மா
நிறைவுற்ற நெஞ்சம் வேண்டும் காளியம்மா. 6

நீதிநேர்மை கொள்ளவேண்டும் காளியம்மா
நிகரில்லா நின் கருணை காளியம்மா.
வளம் பெருகும் வாழ்வுவேண்டும் காளியம்மா
அருளுணர்வு ஓங்கவேண்டும் காளியம்மா. 7

ஓங்கார வடிவினளே காளியம்மா
பாங்காக மனத்தகத்தில் காளியம்மா.
ஆதிசக்தி வடிவமாகும் காளியம்மா
எளியோர்க்கு ஏற்றந்தரும் காளியம்மா. 8

மனக்குறைகள் நீக்கிடுவாய் காளியம்மா
மனதார வேண்டுகிறோம் காளியம்மா.
மாதவனின் சோதரியே காளியம்மா
மக்கள்குறை தீர்த்தருள்வாய் காளியம்மா. 9

(காப்பாய் காளீ! சரணம் அம்மா.)

சுபம்

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மவளம் சுறக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(தெய்வச்சேக்கிழார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

சென்னை-சிவத்திரு. வி. சோமசேகர சிவாசார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

---

1. **விபூதி மகிமை** (கையிருப்பு இல்லை)
2. **உருவத்தில் இறைவன்** (கையிருப்பு இல்லை)
3. **நவராத்ரிதேவியர் துதித்திரட்டு** (கையிருப்பு இல்லை)
4. **நூதனாலய பஞ்சஸம்ஸ்காரவிளக்கம்** (கையிருப்பு இல்லை)
5. **ஆலயாகார அர்த்தவிவரணம்** (கையிருப்பு இல்லை)
6. **காக்கும் காளியின் காருண்ய மஹிமை** (கையிருப்பு இல்லை)
7. **சைவாகமத்தில் சிவயோகநெறி (தமிழில் 100 பக்கம்) ரூ.100.00**
   (சிவயோகப் பயிற்சிசெய்யும் விதிமுறைகள், அதன் எட்டு உறுப்புக்கிரியைகள்,செய்முறைகள்,ஆகமச்சான்றுகளுடன் விளக்கும் நூல்)
8. **திவ்யாபிஷேக விதி (தமிழில் 136 பக்கம்) ரூ.150.00**

   (தெய்வங்களுக்கான திருமஞ்ஜன விதிமுறைகள், அபிஷேகத்தின் பொருட்கள், இலக்கணங்கள், 36 வகைகள், பயன்கள் இவற்றை ஆகம சான்றுடன் விளக்கும் நூல்.)
9. **புஷ்ப்பார்ச்சன விதி (தமிழில் 124 பக்கம்) ரூ.150.00**

   (இறைவழிபாட்டிற்கு ஏற்ற 200 மலர்வகைகள், காலங்களுக்கு உரியவை, மலர்களின் சேமிப்புமுறை, பயன்பாட்டுமுறை, மலர்வகைகளின் பயன்கள் இவற்றை சான்றுடன் விளக்கும் நூல்)

10. உத்ஸவபேதக் கிரியாபோதம் (தமிழில் 172 பக்கம்) ரூ.300.00

(சைவாலய விழாவகைகளின் செயல்முறைகள். பெருவிழாவின் 24 வகைகள், விழாக்கிரியைகள், தெய்வப்புறப்பாட்டுமுறை, ஹோமபலிதான முறைகள், விழாக்கால பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுகளுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

11. நக்ஷத்திர சாந்தி விதானம் (தமிழில் 300 பக்கம்) ரூ.600.00

(27 நட்சத்திரங்களின் பரிஹார சிறப்புஹோமங்கள், சாந்தி விதிமுறைகள், பிறந்தநாளில் செய்யத்தக்க வழிபாட்டுவகைகள், தானவகைகள் இவற்றை சான்றுகளுடனும், விஷயங்களை அட்டவணையில் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

12. ஹோம லக்ஷண ஸங்கிரஹம் (தமிழில் 326 பக்கம்) ரூ.300.00

(இறைவேள்விகளின் இலக்கணங்கள், 36வகையில் அக்னியின் உருவப்படங்கள், யாகசாலைகள், குண்டங்கள், 16வகைஹோமங்கள், ஹோமப்பொருட்கள், ஹோமகாலத்திய பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

13. புவனேச்வரீ பூஜாகல்பம் (தமிழில் 175 பக்கம்) ரூ.300/–

(தேவீஉபாசனாமுறை, தத்துவவிளக்கம், புவனேச்வரீபூசையின் செய்முறை, ஸ்ரீசக்ரதேவிகளின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள், அடங்கிய வீட்டுப்பூசைக்கான நூல்.)

14. சிவாகம கட்டுரைத் திரட்டு (பாகம் 13) (தமிழில் 136 பக்கம்) ரூ.200/–

(சைவாகமங்களில் ஆறு அறிஞர்களின் ஆறுதலைப்புகளைப்பற்றிய சான்றுடன் கூடிய 6 சிறப்புக்கட்டுரைகளின் தொகுப்புத்தமிழ்நூல் வரிசையில்1)

15. சண்டீயாக மஹிமை விளக்கம் (தமிழில்) ரூ.300/–

(சண்டீதேவியின் மஹமைகள், சண்டீயாக வகைகள், சண்டீஹோமத்திற்கான பொருட்கள், செய்முறைகள், சண்டீதுர்கையின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள் அடங்கிய தமிழ்நூல்)

16. திவ்ய ஸ்தவ கதம்பம் (பக்கம்–150) ரூ.200.00
(தமிழ்.& கிரந்தஎழுத்தில்) (தெய்வத்துதித் திரட்டு)

கிரந்தஎழுத்தில் மூலமானதுதிகளும், அவைக்கு சமஸ்கிருதம் மற்றும் தமிழ் இருமொழிகளில் பதவுரையும் கொண்டுள்ள 200 துதிகள் உள்ளநூல்.

17. காளீ பூஜா ப்ரபாவம் (பக்கம்–380) ரூ.450.00
(காளீ வழிபாட்டுப் பெருமைகள்)

காளீஉபாஸனை முறை, உருவதத்துவ விளக்கம், ஆலயபூஜை விதிமுறைகள், 1008,300,108, நாமாவளிகள், துதிகள், யந்திரபூஜைமுறைகள் அடங்கிய நூல்.

18. சுபாஷித ரத்னமாலா – நற்கூற்று மணிமாலை ரூ.400.00
(மூலமும் – உரையும் முற்றிலும் தமிழ்எழுத்தில்)

இராமாயணம், மஹாபாரதம், ஸ்மிருதிகள், புராணங்கள், காவியங்களிலிருந்து தொகுக்கப்பட்ட 1008 நீதிசாஸ்த்திர உபதேச நல்மொழிகளை கருத்துரையுடன் கொண்டுள்ளநூல்.

19. சிவாகம ஸூக்தி மஞ்ஜரீ (சிவாகம நல்மொழிப் பூங்கொத்து) ரூ.200.00

சைவாகமங்களில் அனைவரும் அறியவேண்டிய நல்மொழிகளை, தனித்தனி தலைப்புகளில் தமிழில் மூலசுலோக சான்றும் அவைக்கு தமிழில்கருத்துரையும் கொண்ட 324 தருமங்களின் தொகுப்புநூல்.

20. சைவ நிர்வசனவசனாமிருதம். (பக்கம்–114) ரூ.200/–
(சைவாகம பரிபாஷைச் சொற்பொருள் விளக்கம்) (தேவநாகரீ மட்டும்)

அரியசொற்களுக்கு பெயரின் சான்றுடன் காரணவிவரங்களைக் கூறும்நூல்.

21. சிவஸ்தோத்ர முக்தாவளீ (கிரந்தலிபி) (பக்கம்–104) ரூ.100/–
சிவத்தோத்திரங்களின் தொகுப்பு

22. ஸ்ரீநவதுர்கா (ஜபவிதி) நாகரலிபி & தமிழ்

23. பிரத்யங்கிரா ஜபவிதி (நாகரலிபி)

24. சிவசக்தி ஸ்தோத்ரமாலா. தேவநாகரி (பக்கம்–320) ரூ.200/–
க்ஷேத்திரசிவலிங்க மாஹேச்வரமூர்த்திகள் மற்றும் பரிவாரதெய்வங்களின் துதிகளுடனும், தமிழ்உரையுடன் கூடிய சிவமஹிம்ன துதிகளுடனும் உள்ளது.

25. பத்ரகாளீ தீபபூஜையும் தேவீபாராயண துதிதிரட்டும்.
(தமிழ்) (பக்கம்–160) ரூ.150/–

26. ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்தஎழுத்தில் ரூ.1000.00

(சைவைணவக் கோயிலின் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3 x 3 அல்லது 5 x 5 ல் ஆகமவிதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரிவைக்கு மட்டுமே கிடைக்கும்.

ஸ்ரீ சண்முகர்



உமாகோமல ஹஸ்தாப்ஜ ஸம்பாவித லலாடகம்

ஹிரண்யகுண்டலம் வந்தே குமாரம் புஷ்கரஸ்த்ரஜம்.

நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.,

சென்னை, மஹரிஷிவேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை & சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள் பலவற்றை பலமுறை தலைமைஏற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமைஅர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத்தேர்வுகளில் பலமுறை பரீக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், போதகராகி பலமாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னையில் மாதாந்திர சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிளைத் தொடர்ந்துநடத்தியும் சமயம் சார்ந்த 20–க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டும் வருபவர்.